பக்கங்கள் : பத்து

Registered as a Newsp...

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 மாசி 07 செவ்வாய்க்கிழமை (19.02.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 85

# மன்னாரில் நேற்று மும்முனைகளில் 12 மணி நேரம் தொடர் மோதல்!

## முன்நகர்வு முறியடிப்பு எனப் புலிகள் தகவல்

மன்னார், பெப்ரவரி. 19

மன்னாரில் பாலைக்குழி, உயிலங்குளம், கட்டுக்கரை ஆகிய மூன்று முனைகளில் இருந்தும் விடுதலைப்புலிகளின் பகுதிகளுக்குள் முன்னேற முயன்ற படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று 12 மணி நேரமாகத் தொடர்ந்து கடும்மோதல்கள் இடம்பெற்றதாக களமுனைச் செய்திகள் தெரிவித்தன.

முன்நகர்வுக்கு எதிராகத் தாம் கடும் தாக்குதல்களை நடத்தி முறியடித்துவிட்டனர் என்று விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து நேற்றிரவு வரை இராணுவத் தரப்பில் இருந்து தகவல் எதுவும்வெளியிடப்படவில்லை.

மன்னாரில் மும்முனைகளில்நேற்று அதிகாலை முதல் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட பாரிய முன்நகர்வுக்கு எதிராக தமிழீழ விடுதலைப் புலிகள் தீவிர தாக்குதலை நடத்தினர் எனத் தெரிவிக்கப் பட்டது.

(10ஆம் பக்கம் பார்க்க)

## தள்ளாடித் தளம் மீது பீரங்கித் தாக்குதல்

மன்னார், பெப். 19

மன்னார், தள்ளாடி படைத்தளம் மீது நேற்றுக்காலை 9.30 மணியளவில் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட பீரங்கித் தாக்குதலில் இரு படையினர் படுகாயமடைந்தனர் எனக் கூறப்பட்டது.

(10ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் 3,300 கோடி ரூபாவைக் கடனாக வெளிநாட்டு வங்கிகளிடம் பெற அரசு முயற்சி!

கொழும்பு,பெப்ரவரி 19

கடந்த ஒக்ரோபரில் சுமார் ஐயாயிரத்து ஐந்நூறு கோடி ரூபாவை வெளிநாட்டு வங்கிகளிடமிருந்து வட்டிக்கு, குறுகிய காலக் கடனாகப் பெற்றுக்கொண்ட அரசு, அடுத்த ஓரிரு மாதத்தில் மேலும் மூவாயிரத்து முந்நூறு கோடி ரூபாவை அதேபோல கடனாகப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் கூறப்படுகின்றது.

(10ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் ஆண்டான்குளம் பகுதி கைப்பற்றப்பட்டது; நிலைகளைப் பலப்படுத்துவதாக இராணுவம் அறிவிப்பு

கொழும்பு, பெப். 19

மன்னாரின் கிழக்கே விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த ஆண்டான்குளம் பகுதியை நீண்ட பல வருடங்களின் பின்னர் இராணுவத்தினர் நேற்றுக் கைப்பற்றித் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர் எனப் படைத்தரப்பில் அறிவிக்கப்பட்டது.

(10ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை பாடநெறிகள் இனிக் கொழும்பில்

யாழ்ப்பாணம், பெப். 19

யாழ். பல்கலைக்கழகத்தின் சட்டத்துறை சார் பாடநெறிகள் கொழும்பில் நடத்தப் படவுள்ளதாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதற்கு உகந்த இடம்தெரிவு செய்யப் பட்டுள்ளதாகவும் கொழும்பு பல்கலைக்கழ

(10ஆம் பக்கம் பார்க்க)

## மேர்வின் சில்வா விலகமாட்டாராம்!

அரசுத் தரப்பின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து தாம் இராஜினாமாச் செய்கிறார் என முன்னர் அறிவித்திருந்த அமைச்சர் மேர்வின் சில்வா, இராஜினாமாச் செய்யும் எண்ணத்தைத் தாம் கைவிட்டுவிட்டார் என இப்போது அறிவித்திருக்கிறார்.

இதன் காரணமாக அவர் தொடர்ந்தும் அமைச்சராகவும், எம்.பியாகவும் நீடிப்பார்.(உ)

## கொசோவோவின் பிரிவினைக்குக் கிடைத்த வெற்றி ஈழத் தமிழருக்கும் கிடைக்கலாம் என அரசு அச்சம்

### அதனால்தான் அதை எதிர்த்து இலங்கை விழுந்தடித்து அறிக்கையாம்

கொழும்பு,பெப்.19

கொசோவோவின் பிரிவினை இயக்கத்திற்குக் கிடைத்துள்ள வெற்றி காரணமாக, விடுதலைப் புலிகளின் சுதந்திர தாயகத்திற்கான போராட்டம் வெற்றி பெறலாம் என இலங்கை அரசு அச்சம் கொண்டுள்ளதாகவும், அதன் காரணமாகவே அது கொசோவோவின் சுதந்திரப் பிரகடனத்தை உடனடியாக விழுந்தடித்து எதிர்ப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

கொசோவோவின் சுதந்திரத்திற்கு மேற்குலகு வழங்கும் ஆதரவும் இலங்கை அரசுக்கு அதிக கவலையை அளித்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

(10ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில் கிறிஸ்தவ மதகுரு ஞாயிறன்று இரவு சுட்டுக் கொலை!

### மனைவி படுகாயம்; குழந்தை அதிர்ச்சியில் மயக்கம்

அம்பாறை,பெப்.19

அம்பாறை, வை.எம்.சி.ஏ. சந்திக்கு அருகில் நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணியளவில் கிறிஸ்தவ மதகுரு ஒருவர் இனந்தெரியாதஆயுததாரிகளால் சுட்டுக் கொலைசெய்யப்பட்டிருக்கின்றார். இச்சம்பவத்தில் அவரது மனைவியார் படுகாயமடைந்தார். அவர்களது ஒன்றரை

(10ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டு வான்பரப்பில் 'கிபிர்' விமானங்கள்

யாழ்ப்பாணம், பெப். 19

யாழ். குடாநாட்டின் வான்பரப்பில் நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் நுழைந்த 2 'கிபிர்' விமானங்கள் யாழ்ப்பாணத்துக்குத் தெற்குப் புறமாக முன்னரங்க காவலரண பகுதிகளில் குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தின.

(10ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியக் கொமாண்டோக்களின் உதவியுடனேனும் பிரபாகரனைப் பிடிப்பது என்பது மிகவும் கடினம்

### வெளிவிவகாரச் செயலாளர் கோஹண சொல்கிறார்



கொழும்பு, பெப்19

இந்தியாவிலிருந்து கொமாண்டோக்களின் உதவியுடன், இலங்கைப் படைகளும் இணைந்து தாக்குதலை நடத்தினாலும் கூட, விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை பிடிப்பது மிகவும் கடினமானது.

சிறப்பான பாதுகாப்புடன் நன்கு ஒருங்கமைக்கப்பட்ட காவலுடன் அவர் இருக்கிறார். ஆகையால் அவரைப் பிடிப்பதற்கு அதிலும்கூட அதிக பலம் தேவைப்படும். எனது மதிப்பீடு அதுதான்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் வெளி விவகார அமைச்சின் செயலாளர் பாலித கோஹண.

இணையத்தளம் ஒன்றுக்கு அளித்த நீண்ட செவ்வியில் இதனை அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

இது குறித்து அவர் விவரித்திருப்பதாவது:-

கேள்வி:- பிரபாகரன் பாதுகாப்பாக, எரித்திரியாவில் தஞ்சம் பெறுவதற்கான ஏற்

(10ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தாய், மகள் உட்பட நால்வர் ஆணைக்குழுவில் நேற்றுச் சரண்

உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், மகள் உட்பட நான்குபேர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் சரணடைந்துள்ளனர்.

பங்களா வீதி, மீசாலையைச் சேர்ந்த தாய் (வயது-28), அவரது மகள் (வயது-6), நெடுங்குளம் வீதி, கொழும்புத்துறையைச் சேர்ந்த கணனி திருத்துநர் (வயது-30), அல்லாரை மீசாலையைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான கடற்றொழிலாளி (வயது-32) ஆகியோரே இவ்வாறு சரணடைந்துள்ளனர். இவர்களைப் பாதுகாப்பாக தங்க வைப்பதற்கான ஏற்பாடுகளை ஆணைக்குழு மேற்கொண்டுள்ளது.


## உடன் தேவை

யாழ்.வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள ஆங்கில மருந்தகத்திற்கு விற்பனையாளர்கள் (பெண்கள்) உடன் தேவை.

2வருட அனுபவம் உள்ளவர்களுக்கு முன் உரிமை வழங்கப்படும். புதிதாக பழகவிரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.

**வசந்தம் பாமசி,**
456, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சி/551518)


## சேவைநலன் பாராட்டு



### வை.இராசரத்தினம்
*(கிராம அலுவலர்)*

பரந்த தென்மராட்சியின் பல பகுதிகளிலும் சேவையாற்றி அழிந்த நகரத்திலும் சுற்றாடலிலும் 17 வருடங்கள் கடமைப் பற்றுடனும் சேவை மனப்பான்மையுடனும் துடிப்புடனும் பணியாற்றி பொதுப் பணிகளில் முன்னின்று உழைத்து அகவை அறுபதில் இளைப்பாறும் மேன்மைமிகு வை.இராசரத்தினத்தின் மகத்தான சேவையை பாராட்டுகின்றோம். சமகாலத்தில் சாவகச்சேரி வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் பொறுப்புமிகு பொருளாளராகவும் சபையின் பல சுமைகளை தாங்கிச் செயலாற்றும் அவரை மனமுவந்து பாராட்டுவதுடன் அவரது பொதுப்பணி மென்மேலும் தொடர அவரது இளைப்பாற்றுக் காலம் சுபீட்சமாக அமையவும் பிரார்த்திக்கின்றோம்.

சாவகச்சேரி வைத்தியசாலை அபிவிருத்திச்சபை.

## 2 nd Year Remembrance



**REV.M.M.INPARUBAN**
Entered Glory on 19th Feb 2006

Fondly remembered and sadly missed by wife & children (71236)


# மலேசியாவில் உடனடி வேலைவாய்ப்பு

பிரபல ஜப்பானிய இலத்திரனியல் நிறுவனத்திற்கு (Sony, Panasonic, Kenwood) சாதாரண ஆங்கில அறிவுடைய 18-28 வயதுக்கு உட்பட்ட பெண்களும், 18 - 35 வயதுக்கு உட்பட்ட ஆண்களும் உடனடியாகத் தேவை.

**சம்பளம்** - பெண் - RM 800 - RM - 25,000/-

ஆண் - RM 800 - RM - 1300 - 25,000/- - 40,300/-

தங்குமிட வசதி, மருத்துவ சேவை, பிரயாணச் சீட்டு இலவசம்

கடவுச்சீட்டும், 10 நிழற்படங்களும்(passport size Photo) சுயவிவரத்துடன் (BIO-DATA) கீழ்காணும் முகவரியில் 22-02-2008 தொடக்கம் 23.02.2008 வரை காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை நேர்முகப்பரீட்சை நடைபெறும்.

**227, கொழும்புத்துறை வீதி,**
**சுண்டிக்குழி, யாழ்ப்பாணம்.**
(பாண்டியன் தாழ்வு வைரவர் கோயிலுக்கு அருகாமையில்)
(சி/551523)


## மெய்வன்மை போட்டிகள்

யாழ்ப்பாணம்,பெப்.19

கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயத்தின் மெய்வன்மைப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பி.ப 1 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் சி.பவளகுமாரன் தலைமையிலே நடைபெற இருக்கும் இந்த நிகழ்வில் தென்மராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர்.நா.சத்தியநாதன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (203-288)

* * *

யாழ்ப்பாணம்,பெப்.19

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தில் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று பி.ப ஒரு மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் மு.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும்.

போட்டிக்கு முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை தலைவர் பேராசிரியர் க.சிவநாதன் கலந்து கொள்வார். (1-207)

* * *

யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டி நாளைபுதன்கிழமை பி.ப. 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலைய அதிபர்வி.மாணிக்கம்தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலயப் பணிப்பாளர் திருமதி.எ.வேதநாயகமும் சிறப்பு விருந்தினராக யாழ்.கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் த.புஞ்சலிங்கமும் கலந்து கொள்வர். (1-207)

### நீதி நூல் மனனப்போட்டி

வண்ணை - சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக்கழகம் வருடாந்தம் நடத்தும் நீதிநூல் மனனப் போட்டி நாளை புதன்கிழமை காலை 9.00 மணி முதல் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தரம் 1, 2 மாணவர்களுக்கு நடை பெறம் இப்போட்டிக்கு பல்வேறு பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 650 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர். (அ)


## தேவை

கல்பேட், ஊர் பேட்டுக் கோழிகள், விறாத்துக் குஞ்சுகள் உடன் தேவை.

**தாசன் பாம்**
158/4, கோயில் வீதி, யாழ்ப்பாணம்

## விற்பனைக்கு

கால்நடை வைத்தியரின் ஆலோசனைக்கு அமைய வளர்க்கப்பட்ட அல்ஷேசன் இன பூச்சி அகற்றப்பட்ட ஒன்பது மாத ஆண் நாய் விற்பனைக்குண்டு.

தொடர்பு: பா.மகேந்திரம்,
59, கண்டி வீதி, சாவகச்சேரி.
அல்லது T.P.இல. 0779309790

வண்ணை ஸ்ரீ விஸ்வலிங்க மகா கணபதி கோயில்
## பணியாளர் தேவை

மேற்படி கோயிலில் கடமையாற்ற ஆண் பணியாளர் ஒருவர் தேவைப்படுகின்றார். 29.02.2008 ஆம் திகதிக்கு முன் உங்கள் சுய விவரத்துடன் விண்ணப்பிக்கவும். சம்பளம் நேரில் கதைத்து தீர்மானிக்கப்படும்.

665, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம். (71231)

வி.மாணிக்கம்,
செயலாளர்,
தர்மகர்த்தா சபை.


### வடக்கு கிழக்கில் ஞாயிறுமோதல்களில் 49 புலிகள் பலியாம்

கொழும்பு,பெப்.19

இந்த வருட ஆரம்பத்திலிருந்து இது வரை 1,297 விடுதலைப் புலி உறுப்பினர்கள் இராணுவத் தாக்குதல்களில்கொள்ளப்பட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சுநேற்று அறிவித்துள்ளது.

புலிகளுக்கு எதிரான தாக்குதல்கள் தொடர்ந்தும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்படுகின்றன என்றும்-

நேற்று முன்தினம் வடக்கு, கிழக்குப் பகுதிகளில்இடம்பெற்ற மோதல்களில் மட்டும் 49 விடுதலைப் புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர் என்றும் - மேலும் தெரிவிக்கப்பட்டது. (அ-2)

# மரண அறிவித்தல்கள்

### திருமதி
## சறோஜினிதேவி செல்வக்கதிர்காமத்தையா

இடைக்காடு, வளலாயைப் பிறப்பிடமாகவும் கைதடி தெற்கு, கைதடியை வாழ்விடமாகவும், தற்போது ஹெந்தலை வீதி, வத்தளை, கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சறோஜினிதேவி செல்வக்கதிர்காமத்தையா (16.02. 2008) சனிக்கிழமை கொழும்பில் சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் இடைக்காடு வளலாயைச் சேர்ந்த காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை(ஆசிரியர்)- தெய்வானப் பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், கைதடி தெற்கு, கைதடியைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தர் மற்றும் நாகம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகளும், கந்தர் செல்வக்கதிர்காமத்தையா (ஓய்வுபெற்ற சாரதி, தேசிய வீடமைப்பு அதிகாரசபை, யாழ்ப்பாணம் - கொழும்பு) அவர்களின் அன்பு மனைவியும், பரமேஸ்வரி, விமலாதேவி, விவேகானந்தன் (சுவிஸ்), இரவிந்திரன்(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.02.2008) புதன்கிழமை 46/2, வத்தளை, மருதானை வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கியைக்காகக் கறவலைப்பிட்டி இந்து மயானத்திற்குப் பி.ப.3 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கைதடி தெற்கு,
கைதடி.

தகவல்
கணவர், சகோதரர்கள்,
மைத்துனர்கள், பிள்ளைகள்.
(71243)

## திருமதி பரமேஸ்வரி கனகசபாபதி (பேபி)

பன்னாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி பரமேஸ்வரி நேற்று (18.02.2008) திங்கட்கிழமை இந்தியாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து-தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் மகளும், காலஞ்சென்ற வைரமுத்து-சின்னத்தங்கம் தம்பதியினரின் மருமகளும், கனகசபாபதியின் (ஓய்வுபெற்ற இ.போ.ச. சாலைப்பரிசோதகர்) அன்பு மனைவியும், கமலாதேவி, துரைபாலசிங்கத்தின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19.02.2008) செவ்வாய்க்கிழமை இந்தியாவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பன்னாலை,
தெல்லிப்பழை.

தகவல்:
சகோதரர்கள்

## பொன்னம்பலம் நல்லதம்பி



(இளைப்பாறிய மருத்துவ அதிகாரி R.M.O.)

கோப்பாய் மத்தியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட Dr.பொன்னம்பலம் நல்லதம்பி நேற்று (18.02.2008) திங்கட்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக்கணவரும் குமரசிறி(ஆசிரியர்), பிறேமச்செல்வி (பொறியியலாளர், ஆஸ்திரேலியா), நேசநங்கை (மருந்தாளர்) ஆகியோரின் அன்புத்தந்தையும், ரேவதி (ஆசிரியை), ஜெயகணேஷ்(இரசாயணி, ஆஸ்திரேலியா), சுரேந்திரன் (கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மாமனாரும் தமிழ்ச்செல்வி (வேம்படி மகளிர் கல்லூரி), தனுப்பிரியா(புனித பொஸ்கோ வித்தியாலயம்), காயத்திரி(ஆஸ்திரேலியா), கலையரசி, எழிலவன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிநிகழ்வுகள் இன்று (19.02.2008) செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் எரியூட்டல் நிகழ்விற்காக உரும்பிராய் இளம்காடு இந்து சுடலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சோனெழு,
கோப்பாய் மத்தி.

தகவல்:
குடும்பத்தினர்
(சி/551522)

## கலாபூசனம் கந்தையா உருத்திராபதி



தெல்லிப்பழையை நிரந்தர வசிப்பிடமாகவும், மானிப்பாயை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா உருத்திராபதி நேற்று (18.02.2008) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையா - சீதேவி தம்பதியரின் மகனும், நாகம்மாவின் அன்புக் கணவரும், சிவஞானம், செல்வஞானம், கமலாவதி, தங்கவேல் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சந்திராதேவி, ராதா, அபரஞ்சிதா, சற்குணரத்தினம், சாரதா ஆகியோரின் மாமனாரும், பிரேமதாஸ், கல்யாணி, சுதர்சன், தட்சாயினி, அனோஜா, நவநீதன், பிரதீபா, பிரசன்னா, சுசிதர், செந்தூரன், லதா, பிரியகாந்தன், புகழினி, திவாகரன், அருணன், திலக்சன், திவ்யா ஆகியோரின் பேரனாரும், ஆர்ஜா, மானுஜா, அஜய் ஆகியோரின் பீட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிய்யகள் நாளை (20.02.2008) புதன்கிழமை மு.ப. 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மானிப்பாய் வடகிழக்கு,
மானிப்பாய்.

தகவல்:
பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வடமராட்சி வலய முறைசாராப் பிரிவினரின் அனுசரணையுடன் நாகர் கோயில் மகாவித்தியாலயத்தில் (புனிதநகர்) நடத்தப்பட்ட தையல் தொழிற்பயிற்சி நெறிக் கண்காட்சியை வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராசா மங்கள விளக்கேற்றி ஆரம்பித்துவைப்பதையும் அருகில் பாடசாலை அதிபர் ச.திரவியராசா, வடமராட்சி வலய முகாமைத்துவப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம், பருத்தித்துறை சமுர்த்திப் பொது முகாமையாளர் அன்ரனி ஆகியோர் நிற்பதை முதலாவது படத்திலும் பயிற்சி பெற்றோரை இரண்டாவது படத்திலும் காணலாம். (203)

## எந்திரவியல் டிப்ளோமாவிற்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,பெப்.19

கொக்குவில், பிறவுண் வீதியில் அமைந்துள்ள இலங்கை திறந்த பல் கலைக்கழக யாழ்.பிராந்திய நிலையத்தில் எந்திரவியல் டிப்ளோமா இள மாணிக் கற்கைநெறிக்கான விண்ணப்பப் படிவங்கள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன என்று எந்திரி ச.ஆ. ஞானேந்திரன் தெரிவித்துள்ளார்.

விண்ணப்பப்படிவத்தை 350 ரூபா செலுத்திப் பெற்று எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்னர் பூரணப்படுத்தி அனுப்பி வைக்குமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (203)

## மூளாய் பிரதான வீதிகளின் சந்திகளில் உரப்பைகளில் கட்டியபடி கழிவுகள்

### போக்குவரத்துச் செய்வதில் நெருக்கடி

சுழிபுரம், பெப்.19

மூளாய்ப் பகுதியில் பிரதான வீதிகளின் சந்திகளில் உரப்பைகளில் கட்டப்பட்டு கழிவுகள் கொட்டப்படுகின்றமையால் போக்குவரத்துச் செய்வதில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சன நடமாட்டம் இல்லாத வேளைகளில் இவ்வாறு கழிவுப் பொருள்கள் கொட்டப்படுகின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வீட்டுக் காணிகளில் தேங்கியுள்ள கழிவுகளை இவ்வாறு மூடைகளாகக் கட்டி வீதிகளில் போடுவதாகப் பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு பொது இடங்களில் கழிவுகள் கொட்டப்படுவதால் துர்நாற்றம் வீசுவதோடு சுகாதாரச் சீர்கேடும் உண்டாகிறது.

இந்த விடயத்தில் மக்கள் அக்கறையுடன் செயற்படுவதன் மூலம் போக்குவரத்து அசௌரியங்களைக் குறைக்க முடியும் எனவும் உரிய அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனமெடுத்து குறிப்பிட்ட இடத்தில் உள்ள கழிவுகளை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர். (203-28)

## இலங்கை சமுர்த்தி அதிகார சபை மாவட்ட ரீதியாக சட்ட அறிஞர் சபைகளை அமைக்கவுள்ளது

### சட்டத்தரணிகளிடம் இருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், பெப்.19

இலங்கை சமுர்த்தி அதிகாரசபை மாவட்ட ரீதியாக சட்ட அறிஞர் சபை ஒன்றை அமைத்துள்ளது.

இலங்கை சமுர்த்தி அதிகாரசபை பணிப்பாளர் இதற்கான விண்ணப்பங்களை சட்டத்தரணிகளிடமிருந்து கோரியுள்ளார்.

விண்ணப்பதாரர் சட்டத்துறையில் 10 வருட அனுபவம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

பெயர், முகவரி, அனுபவம் ஆகிய விவரங்களைக் குறிப்பிட்டு சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்துடன் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் எடுத்த சான்றிதழ், சிங்கள, ஆங்கில நொத்தாரிசு அனுமதிப் பத்திரம் ஆகிய ஆவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளும் அனுப்பப்பட வேண்டும்.

அத்துடன் எந்த மாவட்டத்தில் நீதிச் சேவையை ஆற்ற விரும்புகிறார்கள் எனக் குறிப்பிடவேண்டும்.

நாடளாவிய ரீதியில் 25 மாவட்டங்களிலும் சமுர்த்தி சட்ட அறிஞர் சபை நிறுவப்படவுள்ளது.

விண்ணப்பங்களை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் பணிப்பாளர் அதிபதி, இலங்கை சமுர்த்தி அதிகாரசபை, 4 ஆம் மாடி செத்சிரிபாய, பத்திரமுல்ல எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (203-95)

## நவாலியில் புதிய நெல் விற்பனையில்

நவாலி, பெப்.18

ஆனைக்கோட்டை நவாலிப் பகுதி யில் புதியநெல் - ஒருமூடை நெல் 2 ஆயிரத்தி 500 ரூபா முதல் 2 ஆயிரத்தி 700 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது.

தற்போது அறுவடைகாலமாகையால் இந்த விலைக்கு நெல் விற்பனை செய்யப்படுவதாகக் கூறப்படுகிறது.

இதன் விலை மேலும் அதிகரிக்குமா அல்லதுகுறைவடையுமா எனத் தெரியாத நிலையில் விவசாயிகள் உள்ளதாகவும் கூறப்பட்டது. (203-100)

## மாறுபட்ட விலைகளில் சிமெந்து விற்பனை

நவாலி,பெப்.19

குடாநாட்டு வர்த்தக நிலையங்களில் மாறுபட்ட விலைகளில் சிமெந்து விற்பனை செய்யப்பட்டு வருவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு மாறுபட்ட விலைகளில் விற்கப்படுவதால் அவற்றின் உண்மையான விலையை அறிந்துகொள்ள முடியாத நிலையில் மக்கள் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

குடாநாட்டுக்குத் தேவையான சிமெந்து கப்பல்மூலம் எடுத்து வரப்படுகின்றன என்று கூறப்பட்ட போதும் அதற்கான ஒரு நிர்ணய விலையில் அவை விற்பனை செய்யப்படுவதில்லை என்று மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

ஒரு சில வர்த்தக நிலையங்களில் ஆயிரத்தி 300 ரூபாவாகவும் மற்றும் சில நிலையங்களில் ஆயிரத்து 500 ரூபா, ஆயிரத்து 550 ரூபாவாகவும் மாறுபட்ட விலைகளில் விற்பனை செய்யப்படுவதாகக் கூறப்படுகிறது. (203-100)

## கல்வியும், ஒழுக்கமும் மாணவர்களின் இரு கண்கள் அவற்றை இழந்து விடாது பார்த்துக் கொள்வது அவசியம்

### சுகாதாரப் பணிப்பாளர் கேதீஸ்வரன் அறிவுரை

வடமராமட்சி,பெப்.19



கல்வியும், ஒழுக்கமும் மாணவர்களின் இரு கண்களா கும். இவற்றைக் கடைப்பிடிப்பதன் மூலம் நீண்டகால மகிழ்ச்சியைப் பெற்றுக் கொள்ள முடியும். குறுகியகால நன்மைகளுக்காக அவற்றை மாணவர்கள் இழந்து விடக்கூடாது. இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ்.பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையல்:-

இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் நான் இக் கல்லூரியில் கல்விகற்ற காலத்தில் கடைப்பிடிக்கப்பட்ட பாரம்பரியங்கள் இன்றும் இப் போட்டியில் கடைப்பிடிக்கப்பட்டு வருவதையிட்டு மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.ஹாட்லிக் கல்லூரி மாணவர்களுக்கு கல்வியை மட்டுமல்ல, அவர்களுக்குத் தேவையான வாழ்க்கைத் திறன்களையும் தொடர்ந்து வழங்கி வருகின்றது.


நான் இக்கல்லூரியில் கற்ற காலத்திலிருந்த அதிபர் டபிள்யூ.என்.எஸ். சாமுவேல் மற்றும் ஆசிரியர்களையும் இந் நேரத்தில் நினைவு கூர்ந்து பார்க்கிறேன். அப்போது ஆசிரியராக இருந்த குணசீலன் ஆசிரியர் இன்றைய விளையாட்டுப் போட்டியிலும் சமூகமளித்துள்ளார்.

இப்போதைய அதிபர் சாமுவேல் மாணவர்களுக்கு அடிக்கடி கூறுவார் ''குறுகிய கால மகிழ்ச்சிக்காகக் கல்வியால் எதிர்காலத்தில் கிடைக்கப் போகும் நீண்டகால மகிழ்ச்சியை இழந்துவிடக்கூடாது'' அவரின் இக் கூற்றுக்கமைய நாம் நடந்து கொண்டதினால்தான் இன்று ஹாட்லியின் பெருமையும், எமது வாழ்வும் உயர்ந்துள்ளது.

இன்றைய மாணவர்களும் அதற்கமைய நடந்துகொண்டு உயர்வடைய வேண்டும். கல்வியும், ஒழுக்கமும் மாணவர்களின் இருகண்களாகும். ஹாட்லிக் கல்லூரி கல்வியோடு சிறந்த ஒழுக்கத்தையும் மாணவர்களுக்குக் கற்றுக் கொடுத்துள்ளது.

கடந்த க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் இக் கல்லூரியின் மாணவன் ஒருவர் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளார். அதேபோல கடந்த ஆண்டு நடைபெற்ற அகில இலங்கை மெய்வன்மைப் போட்டியிலும் மாணவன் ஒருவர் தேசிய மட்டத்தில் வெற்றியீட்டியுள்ளார்.

உலகின் பல நாடுகளுக்கு நான் சென்ற போது அங்கெல்லாம் இக் கல்லூரியின் பழைய மாணவர்கள் உயர் பதவிகளை வகிப்பதைக் கண்டு மகிழ்ச்சியும், பெருமையும் கொண்டேன்-என்றார். (203-160)




வடமராட்சி, பெப்.19

இமையாணன் துவாளி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த திருவிழா கடந்த 11 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு தேர்த் திருவிழாவும் நாளை முற்பகல் 10.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (203-160)

* * *

வலி.தென்மேற்கு, பெப்.19

மாதகல் புனித லூர்த்து அன்னை (கெவி) ஆலய வருடாந்த திருவிழாவும் திருப்பலிப் பூசையும் கடந்த ஞாயிற்றுக் கிழமை காலை நடைபெற்றபோது பெருமளவான பக்தர்கள் கலந்து கொண்டனர்.


உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள இந்த ஆலயத்தில் இம் முறையே பக்தர்கள் பெருமளவில் கலந்துகொண்டனர். (202-135)

* * *

சுழிபுரம், பெப்.19

சுழிபுரம் மேற்கு கதிர்வேலாயுத சுவாமி ஆலய தேர்த்திருவிழா நாளை புதன் கிழமை இடம்பெறவுள்ளது.

இம்முறை புதிதாக அமைக்கப்பட்ட புதிய கட்டுத் தேரில் சுவாமி வீதியுலா வருவார். (203-28)




## சுழிபுரம் விக்ரோறியாவின் வரலாறு கூறும் மலர் வெளியீடு

சுழிபுரம், பெப்.19

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் வரலாறு கூறும் மலர் வெளியீடு நாளை புதக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் அதிபர் திருமதி அ. வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தப் பாடசாலையில் கற்பித்த ஆசான்களை நினைவு கூரவும் கல்லூரி வரலாற்றை அசை போடவும் இந்த மலர் வெளியிடப்படவுள்ளது.

மலர் ஆய்வுரையை யாழ். பல்கலைக் கழக கல்வித்துறை விரிவுரையாளர் ம. சின்னத் தம்பியும் வாழ்த்துரையை வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரனும் நிகழ்த்துவர். (203-28)

## எள் விலை உயர்வு

சுழிபுரம், பெப்.19

எள்ளின் விலை தற்போது அதிகரித்து வருவதாகக் கூறப்படுகிறது.

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ எள்ளு 235 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றது என்று கூறப்படுகிறது.

இதேவேளை ஒரு போத்தல் நல்லெண்ணெய் 500 ரூபாவாக விற்கப்படுகிறது. (203-28)

## இலவச மருத்துவமுகாம்

கரவெட்டி,பெப்.19

வல்வெட்டித்துறை வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினரின் அனுசரணையும் இலவசக் கண்பரிசோதனை முகாம் ஒன்று எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வைத்தியசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தொண்டைமானாறு முதல் பருத்தித் துத்துறை வரை கரையோரப் பிரதேசத்தில் வாழும் மக்களை இதில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (203-70)

## பிரசித்திபெற்ற கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய பெருந்திருவிழா வெள்ளிக்கிழமை ஆரம்பம்

வலி.தென்மேற்கு, பெப்.19

வரலாற்றுப் பிரசித்திபெற்ற கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயப் பெருந் திருவிழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி அடுத்தமாதம் 7 ஆம் திகதி நிறைவடையவுள்ளது.

திருவிழாக் காலத்தில் தினமும் பாடசாலை மாணவர்களின் கூட்டுப் பிரார்த்தனை, கதாப்பிரசங்கம், பண்ணிசை போன்றன இடம்பெறவுள்ளன.

இதில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகளை ஆலய நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இந்தமுறை நடத்தப்படவுள்ள திருவிழாவின்போது நாட்டில் சாந்தி, சமாதானம் வேண்டியும் இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர பிரார்த்தித்தும் விசேட நவக்கிரக சாந்தி பூசைகள் நடத்தப்படவுள்ளன.

திருவிழாக் காலத்தில் காலை 9 மணி தொடக்கம் சேந்தாங்குளம் மற்றும் தெல்லிப்பழை சோதனைச்சாவடிகள் ஊடாக பக்தர்கள் ஆலயத்திற்குச் செல்வதற்கு அனுமதி வழங்கப்படுமென்று ஆதீனகர்த்தா ராஜராஜஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள் தெரிவித்துள்ளார். (203-135-29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலையில் அதிகரிக்கும் இந்தியச் செல்வாக்கு புலிகளுக்கு மிகப்பெரிய சவாலாக அமையும்

## 'சண்டே ரைம்ஸ்' வார ஏடு கருத்து

கொழும்பு,பெப்.19

விடுதலைப் புலிகளின் தமிழீழத் தனி நாட்டின் தலைநகர் என்று கருதப்படும் திருகோணமலையில் அதிகரித்து வரும் இந்தியாவின் செல்வாக்கு, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஒரு பாரிய சாவாலக இருக்கப்போகின்றது.

கொழும்பிலிருந்து வெளிவரும் 'சண்டே ரைம்ஸ்' ஆங்கில வாரப் பத்திரிகையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

திருகோணமலையில் இலங்கை அரசின் நடவடிக்கைகளால் இந்தியாவின் பிரசன்னம் அதிகரித்துவருகின்றது.

இந்தியன் ஓயில் நிறுவனத்திடமிருந்து இலங்கை மின்சாரசபைக்கான எரிபொருள்கள் வழங்கப்படவுள்ளன.

திருகோணமலையின் நிலாவெளியில் அனல்மின் நிலையம் அமைக்க இந்தியாவும் இலங்கையும் கடந்தவாரம் முடிவு செய்துள்ளன. 500 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் இத்திட்டத்துக்கு 25 கோடி அமெரிக்க டொலர் செலவிடப்படுகிறது. இந்திய அனல்மின் உற்பத்திக் கூட்டுத்தாபனமும் இலங்கை மின்சார சபையும் இணைந்து இப்பணியை மேற்கொள்கின்றன.

எதிர்வரும் ஏப்ரலில் இரண்டு தொகுதிகளுக்கான பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

**திருகோணமலையில் இந்தியாவின் பிரசன்னம்**

இலங்கையில் இத்தகைய நடவடிக்கையானது இயல்பாகவே கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த திருகோணமலையில் இந்தியாவின் பிரசன்னத்தை அதிகரிக்கச் செய்யும். ஏற்கனவே திருகோணமலையில் இரண்டாம் உலகப் போரின்போது பயன்படுத்தப்பட்ட எண்ணெய்க் குதங்களை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து 'இந்தியன் ஓயில்' நிறுவனம் குத்தகைக்குப் பெற்றுள்ளது.

தமிழீழத் தனிநாட்டின் தலைநகர் எனக் கருதப்படுகின்ற திருகோணமலையில் அதிகரித்துவரும் இந்தியாவின் செல்வாக்கானது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஒரு பாரிய சவாலாக இருக்கும். இதேபோல் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த திருகோணமலை மீது கண் வைத்திருக்கும் உலக நாடுகளின் சக்திகளினது நகர்வுகளையும் இது முடிவுக்குக் கொண்டுவரும்.

**மன்னார் வளைகுடாவில் மற்றொரு இந்தியத் திட்டம்**

அதேபோல, மன்னார் வளைகுடாப் பகுதியில் தென்னிந்தியாவிலிருந்து குழாய் மூலம் இலங்கைக்கு குழாய்வழி மின்சாரம் கொண்டுவரும் மற்றொரு திட்டமும் செயற்படுத்தப்படவுள்ளது. இது தொடர்பில் விவாதிக்க எதிர்வரும் வாரம் இந்தியக் குழுவினர் இலங்கைக்கு வரவுள்ளனர்.

கடந்தவாரம் வெள்ளிக்கிழமை புதுடில்லி சென்றிருந்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இந்தியத் தரப்பினருடனான நெருக்கமான உறவு குறித்து விவாதித்தார்.

பாக்குநீரிணைப் பகுதியில் இந்தியக் கடலோரப் பொலிஸார் விடுதலைப் புலிகளின் கடல்சார் நடவடிக்கைகளை ஒடுக்க பாரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதன் மூலமாக விடுதலைப் புலிகளுக்கான ஆயுதங்கள் மற்றும் மருந்துப்பொருள்கள் விநியோகம் தடுக்கப்படும்.

அதேபோல் இலங்கை இராணுவப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளுக்கு இந்தியாவின் மராட்டிய மாநிலம் புனேயில் பயிற்சி அளித்தமையும் இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பை அதிகரிக்கிறது- என்று அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(சி)


## மலிவு விற்பனை

1. 11x8 அலுவலகத்திற்கு ஏற்ற அலுமினியம் கண்ணாடியிலான அறை A/C பூட்டக்கூடியது.
2. 11x8 அலுமினியம் கண்ணாடியுடன் கூடிய முன்முகப்புக் கதவுடன்
3. 11x8 அலுமினியம் கண்ணாடி பூட்டிய றாக்கை - 1 அடி கொண்ட 10 தட்டுகள், பின்புறம் முகம் பார்க்கும் கண்ணாடி பொருத்தப்பட்டது
4. 5x3 - 1 மேசை
5. அல்பா இரும்புப் பெட்டி - 2x2x2½

தொடர்பு: அதிபர், யா/பெரியபுலம் ம.வி.
T.P.: 021 4591241, 021 222 3446

(71229)

பார்வையிடும் நேரம்: பிற்பகல் 3 - பிற்பகல் 6 வரை



## யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்

### மனைப்பொருளியல் அறைத் திறப்பு விழா

காலம்: 21.02.2008 வியாழன் காலை 9 மணி

தலைவர்: திரு.சி.இராமலிங்கம் (அதிபர்)

பிரதம விருந்தினர்: திரு.கை.சிவகரன்
(உதவிச் செயலாளர், வட மாகாணக் கல்வி அமைச்சு)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்.

(71228)


# இலங்கையில் 'தனியான தமிழர் தாயகம்' ஒன்று வரலாற்றில் என்றுமே இருந்ததே இல்லையாம்!

## அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதர் அங்கு விளக்கம்

வாஷிங்டன்,பெப்.19

இலங்கை பிளவுபடாத ஒரு தேசமாக விளங்குவதற்கான சக்தியை அமெரிக்கா வழங்கவேண்டுமென அந்த நாட்டிற்கான இலங்கைத் தூதுவர் பேர்னாட் குணதிலக வேண்டுகோள் விடுத்துள்ளார்.

'வாஷிங்டன் டைம்ஸ்' இதழில் கடந்த ஞாயிற்றுக்கிழமை தாம் எழுதியுள்ள கட்டுரை ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா, ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்கான தனது முயற்சிக்காக புதிய பகுதிகளை தேடிக்கொண்டிருக்கையில், இலங்கை போன்ற பிரதேசங்களில் ஜனநாயகங்களுக்கு அச்சுறுத்தலாக உள்ள - ஜனநாயக எதிர்ப்பு சக்திகள் குறித்து அது விழிப்புடனிருக்க வேண்டுமென பேர்னாட் குணதிலக தெரிவித்துள்ளார்.

இலங்கையின் மோதல் பிரித்துப் பார்க்க முடியாதபடி பிரிவினைக் கோரிக்கையுடன் இணைந்துள்ளது என அவர் தெரிவித்துள்ளதுடன், சர்வதேச சமூகத்தின் அனுதாபத்தைப் பெறுவதற்காக திட்டமிட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைத் தமிழர்களுக்கான தனிநாட்டுக் கோரிக்கையின் வேர்கள், கற்பனையை அடிப்படையாகக் கொண்டவை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் கோருவது போல வடக்கு - கிழக்கில் தனியான தமிழர் தாயகமென்ற ஒன்று இலங்கையின் வரலாற்றில் என்றும் இருந்ததில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மொழி அடிப்படையில் பாகுபாடு, நீதி மறுக்கப்படுகின்றது, கல்வியில் தரப்படுதல் மேற்கொள்ளப்படுகின்றது என்பன போன்ற குற்றச்சாட்டுகள் தனிநாட்டுக் கோரிக்கையை நியாயப்படுத்தவே முன்வைக்கப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(சி)

## மரண அறிவித்தல்கள்

### மரியநாயகம் ஜெயாநந்தகுமார்

குருநகரைப் பிறப்பிடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட மரியநாயகம் ஜெயாநந்தகுமார் 15.02.2008 அன்று கனடாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மரியநாயகம் - விறிசிற்றம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற அருட்தந்தை F.J.ஸ்ரனிஸ்லோஸ் (O.M.I) அவர்களின் பெறாமகனும் மங்களேஸ்வரியின் அன்புக் கணவரும் வஜன், அஜித், சரோன், மாகிறேற் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற கிறேசியன் மற்றும் மரியம்மா தம்பதியரின் மருமகனும் மாகிறேற் விஜி (மலேசியா), அருட்தந்தை மேரிவேஜின் அமிர்தகுமார் (கனடா), பத்மகுமாரி, றாஜ்குமார் (யாழ்.பலநோக்கு கூட்டுறவு சங்கக் கிளைமுகாமையாளர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற பீலிக்ஸ் (மலேசியா) மற்றும் அன்ரன் றோய், ஜான்சி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக இன்று (19.02.2008) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல: 127,*
*பாங்ஷால் வீதி,*
*குருநகர்,*
*யாழ்ப்பாணம்.*
(71221)

*தகவல்:*
சகோதரர்கள்- F.மாகிறேற் விஜி,
அருட்தந்தை M.M.V.அமிர்தகுமார்,
M.C.றாஜ்குமார் [யாழ்.ப.நோ.கூ. ச. கிளைமுகாமையாளர்],
A.R.பத்மகுமாரி.

### பாலராமுப்பிள்ளை புலேந்திரன்



நல்லூர், யமுனா வீதியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட பாலராமுப்பிள்ளை புலேந்திரன் (சின்னண்ணா) நேற்று (18.02.2008) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலராமுப்பிள்ளை மற்றும் புவனேஸ்வரி (பூமணி - கனடா) தம்பதியரின் அன்பு மகனும் வனேமேஸ்வரியின் (வனம்) அன்புக் கணவரும் சுரேந்திரன் (கனடா), இந்திராவதி, கஜேந்திரன், சத்தியவதி, யோகேந்திரன் (கனடா), பிருந்தாவதி (ஜிக்கி - கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயரூபனின் (கனடா) பாசமிகு தந்தையும் அமரர்களான தில்லையம்பலம் - செல்லம்மா தம்பதியரின் மருமகனும் செலின் (கனடா), நடராஜா (R.D.A ஓய்வூதியர்), சந்திரபாலிகை, கதிர்காமர், சங்கீதா (கனடா), வரதராஜசிங்கம் (சிவா ஆட்ஸ் - கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*64, யமுனா வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.* (712[illegible])

*தகவல்:*
சகோதரர்கள்

# நாச்சியார் தினமும் பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம்,பெப்.19

புண்ணிய நாச்சியம்மையார் தினமும் பரிசளிப்பு விழாவும் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

சைவபரிபாலன சபைத் தலைவர் த.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.இந்துக் கல்லூரி அதிபர் வீ.கணேசராஜா கலந்துகொள்வார்.

இந்நிகழ்வில் கடந்த 10ஆம் திகதி நாச்சியார் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டி களில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. அவர்களின் விவரம் வருமாறு:-

**பண்ணிசைப் போட்டி**

*கீழ்ப் பிரிவு:* வி.வத்சாங்கிதன் (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), பு. குணசர்மிளா (இராமநாதன் கல்லூரி), கு. பவித்திரா (யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை).

*மத்திய பிரிவு:* தி. வருணியா (யாழ். இந்து மகளிர் கல்லூரி), சி. சிவசங்கர் (யாழ்.இந்துக் கல்லூரி), ததர்சிகா (நெல்லியடி ம.ம.வி).

*மேற் பிரிவு:* சு. தசாங்கன் (யூனியன் கல்லூரி), சே.கோபிகா (மானிப்பாய் மெமோறியல்), ந. துஷாந்தி (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி).

**திருக்குறள் போட்டி**

*கீழ்ப் பிரிவு:* இ. இலக்கியா (யாழ்ப்பாணக் கல்லூரி), ச. கஜேந்தினி (ஏழாலை வடக்கு அ.மி.த.க.), ந.மதுராங்கனி (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை).

*மத்திய பிரிவு:* ச.கிரிஷாந் (சென் ஜோன்ஸ்), ம.சங்கவி (வட்டு மத்திய கல்லூரி), அ. ஜீவராசா (புனித ஹென்றியரசர் கல்லூரி).


*மேற்பிரிவு:* சி. ஷாகிர்த்யா (நெல்லியடி ம.ம.வி.), க. சர்மிளா (வட்டு மத்திய கல்லூரி), சா.மது[illegible] மகளிர் கல்லூரி).

(203)

## "சாகும் போது அவர்கள் எதையும் எடுத்துப் போவதில்லை, அவர்களது செல்வமும் அவர்கள்பின் செல்வதில்லை"

மனிதராசப் பிறந்த எல்லோரும், ''நான் பெரியவராக இருக்க வேண்டும்'' ''மற்றவர்களிலும் விட நான் சிறிது மேலானவராக இருக்க வேண்டும்'' என்ற ஓர் ஆசை இயல்பாகவே இருக்கின்றது. இதனை அடைய தவறான வழியில், நீதியற்ற வழியில் முயற்சிக்கும்போதுதான் பொறாமை, போட்டி, சண்டை, கொலைகள் என்பன நடைபெறுகின்றன. எல்லா மனிதருக்கும் ஆசை இருந்தாலும் எல்லாரும் ஒரே நிலையில் மேலானவராக இருக்கமுடியாது. ஏனெனில் பல வகையான சுவையுள்ள பழங்களுடைய மரங்களையும் வெவ்வேறு விதமான நிறங்களையும் மணங்களையும் உடைய பூச்செடிகளையும் இறைவன் படைத்தது போல் வெவ்வேறு வகையான குணாதிசயங்களுடைய மனிதர்களாக எம் ஒவ்வொருவரையும் படைத்திருக்கிறார்.

ஒரு தோட்டத்தில் அழகுற அமைந்த பல்வேறு வடிவமான பல்வகை நறுமணங் கொண்ட பூச்செடிகளைப் போல் வேற்றுமையில் ஒற்றுமை கண்டு, ஒருவருடைய குறைவில் மற்றவருடைய நிறைவால் நிவர்த்தி செய்து வாழ மனிதனுக்குத் தெரியவில்லை. தன் பலத்தால் மற்றவனை வென்று மேலாக நிற்க வேண்டும் என்று தான் விரும்புகிறான்.





எனவே தான் ஆண்டவர் இயேசு கூறுகின்றார் உங்களுள் பெரியவன் உங்களுக்குத் தொண்டராக இருக்க வேண்டும். *தம்மைத் தாமே உயர்த்துகிறவர் எவரும் தாழ்த்தப் பெறுவார். தம்மைத் தாமே தாழ்த்துகிறவர் எவரும் உயர்த்தப் பெறுவார். (லூக் 23:12)*

தன்னைத் தாழ்த்துவதன் மூலம் உயர்த்தப்பட்டவர்களின் அன்னை திரேசாவும் ஒருவர். அவரது வாழ்வில் ஒரு சம்பவம் அவர் பணி ஆரம்பித்த தொடக்க காலங்களில் அவரை யாரும் அறிந்திருக்கவில்லை. அவர் பொறுப்பெடுத்துக் கொண்டு கைவிடப்பட்ட நோயாளிகளைப் பராமரிக்க அவரிடம் பணம் இருக்கவில்லை. தாழ்மையுடன் ஒவ்வொரு கடையாக ஏறி இறங்கி பிச்சை எடுத்தார். அவர் பிச்சைக்காக கை நீட்டிய போது ஒரு குறிப்பிட்ட கடைக்காரன் அவரது கையில் துப்பிவிட்டான். அன்னை திரேசா கோபப்படாமல், தாழ்மையாக மற்ற கையை நீட்டி, எனக்குரியதைத் தந்துவிட்டீர். எனது பிள்ளைகளுக்கு ஏதாவது தாரும் என்று கேட்டார்.

உங்களைக் கழுவி, தூய்மைப்படுத்துங்கள், உங்கள் தீச்செயலை என் திருமுன்னிருந்து அகற்றுங்கள். தீமை செய்தலை விட்டொழியுங்கள் நன்மை செய்யக் கற்றுக் கொள்ளுங்கள். நீதியை நாடி தேடுங்கள். ஒடுக்கப்பட்டோருக்கு உதவி செய்யுங்கள். *(எசாயா1:16-17).* எனவே நாமும் தாழ்மையுடன் தீமைகளை விலக்கி நற்செயல் புரிந்து, இருப்பதை இல்லாதவருடன் பகிர்ந்து, ஆன்மீக சொத்தான புண்ணியங்களைச் சேர்ப்போம்.

- எச்.சி.மரீனா.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



யாழ்.திருக்குடும்பக் கன்னியர்மடம் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக கலந்துகொண்ட யாழ்.மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா, யாழ்.பல்கலைக்கழக ஆங்கிலத்துறை விரிவுரையாளர் திருமதி சாந்தி விக்னராஜா ஆகியோர் வரவேற்று அழைத்துச் செல்லப்படுவதை முதலாவது படத்திலும் அணிவகுப்பு மரியாதையை அவர்கள் ஏற்பதை அடுத்துள்ள படத்திலும், வெற்றியீட்டிய மாணவிகளுக்கு சென்.பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் வண.ஜெறோ செல்வநாயகம் சான்றிதழ் வழங்குவதை மூன்றாவது படத்திலும் காணலாம். (1)

# கோப்பாய்க் கோட்ட வலைப்பந்தாட்டம்; புத்தூர் சோமஸ்கந்தா சம்பியன்

வலி.வடக்கு, பெப்.19

கோப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 19 வயதுப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி கோட்டச் சம்பியனானது.

புத்தூர், ஆவரங்கால் நடராஜா இராமலிங்கம் மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியும், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

போட்டியில் இரு அணிகளும் தமது முழுத் திறமையையும் காட்டி மோதிக்கொண்டன. போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியின் ஆதிக்கமே மிகையாகக் காணப்பட்டது.

போட்டி முடிவில் சோமஸ்கந்தாக் கல்லூரி 24:19 புள்ளிகள் என்ற அடிப்படையில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியை வெற்றிகொண்டு கோப்பாய் கல்விக் கோட்டச் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

மூன்றாம் இடத்திற்கான ஆட்டத்தில் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியும் அச்சுவேலி இடைக்காடு மகாவித்தியாலயமும் மோதிக்கொண்டன.

நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி 24:12 புள்ளிகள் என்ற அடிப்படையில் இடைக்காடு மகாவித்தியாலயத்தை வெற்றிகொண்டு மூன்றாம் இடத்தைத் தட்டிச் சென்றது. இப்போட்டியில் கோப்பாய் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த ஆறு பாடசாலைகள் கலந்துகொண்டன. (1-86)

# ஆனைக்கோட்டை பிரதீப் வி.க. சம்பியன் சண்டிலிப்பாய்க் கரப்பந்தாட்டத்தில்

வலி.வடக்கு, பெப்.19

சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட் டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் ஆனைக்கோட்டை பிரதீப் விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் ஆனைக்கோட்டை பிரதீப் விளையாட்டுக்கழகமும் கல்வளை விநாயகர் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

5 செற்றுக்கள் கொண்ட இப்போட்டியில் பிரதீப் விளையாட்டுக் கழகம் முதல் மூன்று நேர் செற்றுக்களையும் வென்று சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இப்போட்டியில் முதல்மூன்று நேர் செற்றுக்களையும் முறையே 25:21, 25:18, 25:14 என்ற புள்ளிகள் அடிப்படையில் சண்டிலிப்பாய் கல்வளை விநாயகர் விளையாட்டுக் கழகத்தை ஆனைக்கோட்டை பிரதீப் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றுச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. (86)

# இல்ல மெய்வன்மைப் போட்டிகள்

கரவெட்டி,பெப்.19

தேவரையாழி இந்துக் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை புதன் கிழமைபிற்பகல் ஒருமணிக்குக்கல்லூரிவிளையாட்டு மைதானத்தில் நடைபெறுகின்றது.

கல்லூரி அதிபர், ம.குட்டித்தம்பி தலைமையில் நடைபெறும் நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக முகாமைக்குரு அருள்திரு. டேவிட் அழகராசாவும் சிறப்பு விருந்தினராகப் பருத்தித்துறை வை.எம்.சி.ஏ.செயலாளர் டி.எம்.வேதாபரணமும் கலந்துகொள்கின்றனர். (1-70)

* * *

கரவெட்டி,பெப்.19

மணற்காடு, றோ.க.த.பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று நண்பகல் ஒரு மணிக்குப் பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

அதிபர் சி.குருகுலசிங்கம் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக மருதங்கேணிப் பிரதேச செயலர் மா.சிறிஸ்கந்தகுமார், சிறப்பு விருந்தினர்களாக மருதங்கேணிக் கோட்டக் கல்வி அதிகாரி த.தவேந்திரராஜா, மணற்காடு பங்குத் தந்தை வணபிதா.நிருபன்நிசாந்தன் ஆகியோரும் கலந்து கொள்வர். (1-70)

* * *

யாழ்ப்பாணம்,பெப்.19

ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலய மெய்வன்மைப் போட்டி நாளை புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்குப் பாடசாலை மைதானத்தில் அதிபர் அ.அருனந்திசிவம் தலைமையில் இடம்பெறவுள்ளன. கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.சித்திரவடிவேல் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (203)

# கொக்குவில் இந்து - சென். ஜோன்ஸ் மோதல் வல்லவக்குமரன் சதம் அடித்தார்

வலி.வடக்கு, பெப்.19

யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்றுவரும் 19 வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் போட்டியில் கொக்குவில் இந்துக்கல்லூரியைச் சேர்ந்த எஸ்.வல்லவக்குமரன் சதம் அடித்துள்ளார்.

இது யாழ்.குடாநாட்டில் இடம்பெற்று வரும் இந்தாண்டுக்கான பாடசாலைகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டியில் பெறப்பட்ட இரண்டாவது சதமாகும். ஏற்கனவே சென்.பற்றிக்ஸ் கல்லூரி வீரர் வைதீபன் சதம் பெற்றிருந்தார்.

கொக்குவில் இந்துக்கல்லூரிக்கும் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையிலான போட்டி சென்.ஜோன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இப்போட்டியின்போதே கொக்குவில் இந்துக்கல்லூரி தனது முதலாவது சதத்

**குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்**

தைப் பெற்றுக் கொண்டுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக்கல்லூரி 44 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 145 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

கொக்குவில் இந்துக்கல்லூரி சார்பில் துடுப்பெடுத்தாடிய வல்லவக்குமரன் 37, வி.ஜனார்த்தனன் 31 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டார்கள்.

சென்.ஜோன்ஸ் கல்லூரி சார்பில் பந்து வீசிய கவிபிரவீன் 14 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 32 ஓட்டங்களுக்கு 07 விக்கெட்டுக்களையும், சுகதாஸ் 09 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 19 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டையும் கைப்பற்றினர்.



பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி 71.4 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 198 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

சென்.ஜோன்ஸ் கல்லூரி சார்பில் துடுப்பெடுத்தாடிய பிரணவன் 60, ஜெயந்தன் 53, கரிபிரவின் 37 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டார்கள்.

கொக்குவில் இந்துக் கல்லூரி சார்பில் பந்து வீசிய கே.நிரோஜன் 26 ஓவர்கள் பந்து வீசி 04 ஓட்டமற்ற ஓவர்களுடன் 56 ஓட்டங்களுக்கு 06 விக்கெட்டுக்களையும், ஏரகன் 17 ஓவர்கள் பந்து வீசி 05 ஓட்டமற்ற ஓவர்களுடன் 21 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

இரண்டாவது இனிங்சில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக்கல்லூரி 56.1 ஓவர்களில் 05 விக்கெட்டுக்களை இழந்து 238 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

எஸ்.வல்லவக்குமரன் 138, வாகீஸ் 45 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டார்கள்.

சென்.ஜோன்ஸ் கல்லூரி சார்பில் பந்து வீசிய கவிபிரவின் 13.3 ஓவர்கள் பந்து வீசி 03 ஓட்டமற்ற ஓவர்களுடன் 42 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் மற்றும் நவ்நீதன், லர்சன், விதுசன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (1-86)

# பொன்ஜன் இல்லம் முதலாமிடம்

குருநகர், பெப்.19

யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரியின் 2008ஆம் வருடத்துக்கான இல்ல மெய்வன்மைப் போட்டியில் பொன்ஜன் இல்லம் 288 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தைப் பெற்றது.

லோங் இல்லம் 267 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், மத்தியுஸ் இல்லம் 227 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் டன் இல்லம் 144 புள்ளிகளைப் பெற்று நான்காம் இடத்தையும் பெற்றன.

இக்கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டி கடந்த 14ஆம் திகதி கல்லூரி விளையாட்டரங்கில் அதிபர் வண.பிதா ஜெறோ செல்வநாயகம் தலைமையில் நடைபெற்றது. (1-57)

# பல்கலைக்கழகத்தில் கிரிக்கெட் ஆட்டம்

வலி.வடக்கு, பெப்.19

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பழைய மாணவர்களுக்கும் தற்போதைய பல்கலைக்கழக கிரிக்கெட் அணிக்கும் இடையிலான சிநேகபூர்வமான மட்டுப்படுத்திய ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் போட்டி நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (1-86)



காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி, நடேஸ்வரா கனிஷ்ட வித்தியாலயம் ஆகியவற்றின் இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

நிகழ்வின் விருந்தினர்களான வலி.வடக்கு பிரதேச செயலர் சு.முரளிதரன், தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கத் தலைவர் ச.தனபாலசிங்கம், கல்லூரி அதிபர் பொ.அமிர்தலிங்கம், உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.நடராஜா, நடேஸ்வராக் கல்லூரியின் ஓய்வுபெற்ற அதிபர் திருமதி பு.பேரம்பலம், கனிஷ்ட வித்தியாலயத்தின் அதிபர் திருமதி றோ.தயானந்தன் ஆகியோர் மாணவர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்பதை முதலாவது படத்திலும் -

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வலி.வடக்குப் பிரதேச செயலர் ஒலிம்பிக் தீபத்தை ஏற்றி போட்டியை ஆரம்பித்து வைப்பதை இரண்டாவது படத்திலும் -

மானிப்பாய் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி எஸ்.ஜெயவீரசிங்கம் வெற்றிபெற்ற மாணவி ஒருவருக்குச் சான்றிதழ் வழங்குவதை மூன்றாவது படத்திலும் காணலாம். (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

.வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி!
இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல், சுவாசத்தில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் தமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்.

**சித்தாரா அதிமதுரம் ஆடாதோடை சிரப்**

யாழ். குடாநாட்டின் அனைத்துப் பார்மசிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No:-6382) AR/PR/No:228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
**சிவா நறுமணப்பூங்கா**
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(குறிப்பு:- சத்திரச்சந்திக்கு அண்மையில்) (சி/54169)

## பௌர்ணமி தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,பெப்.19

திருநெல்வேலியில் அமைந்துள்ள சத்தியசாயி சேவா நிலையத்தில் நாளை புதன் கிழமை அதிகாலை 5.15 மணிக்கு நகர சங்கீர்த்தனத்துடன் போயா ஆன்மீக நிகழ்வுகள் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

(203)

* * *

கொக்குவில் மேற்கு பாக்யா இசைப் பயிலகத்தில் மாதந்தோறும் பௌர்ணமி தினத்தில் இடம்பெறும் தன்னம்பிக்கைச் சொற்பொழிவில் நாளை மாலை 4 மணிக்கு உளவளத் துணையாளர் நா.நவராஜ் உரை நிகழ்த்தவுள்ளார்.

(203)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

### திருமதி தம்பு மாணிக்கம்



மண்ணவரில் ஒருவராய் 15★05★1930
விண்ணவரில் ஒருவராய் 20★01★2008

20.01.2008 அன்று சிவபதமடைந்த எனது அம்மம்மாவின் மரணச்செய்தி கேட்டு எமக்குப் பல வழிகளிலும் உதவிபுரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கோட்டைக்காடு,
மல்லாகம். (71212)

பேரன்:
சண்முகலிங்கம் சிவநாதன்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 19 10 1919



மறைவு 20 01 2008

### அமரர் தம்பிப்பிள்ளை சுப்பிரமணியம்

அன்பாக எங்களை அரவணைத்த தெய்வமே!
பண்புடன் வாழ வழிகாட்டிய தெய்வமே!
எங்கு சென்றீர் ஐயா எமைவிட்டு
நீங்கள் மறைந்தாலும் உங்கள் நினைவுகள்
ஒருபோதும் எமைவிட்டு நீங்காது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பொற்பதியான் பாதம் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

பொற்பதி வீதி,
கொக்குவில். (71192)

குடும்பத்தினர்.

## கோழிகளுக்கு தடுப்பூசி

வலி.தென்மேற்கு, பெப்.19

சண்டிலிப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி பணிமனையினால் கோழிகளுக்கு கொள்ளை நோய் வராமல் தடுக்கும் திட்டத்தின் கீழ் இன்று செவ்வாய்க் கிழமை முற்பகல் பெரியவிளான்-உயரப்புலம் பொது நோக்கு மண்டபத்தில் வைத்து கோழிகளுக்கு நோய்தடுப்பு ஊசி மருந்து ஏற்றப் படவுள்ளது.

இப்பகுதி மக்களை இச்சேவையில் பயனடையுமாறு சண்டிலிப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி பணிமனை வட்டாரங்கள் கேட்டுள்ளன. (203-135)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

### அமரர் சிலம்பு வீரகத்தி



தோற்றம்: 06.06.1931

மறைவு: 20.01.2008

கடந்த 20.01.2008 அன்று இறைபதம் அடைந்த எமது அன்புத் தந்தையின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும் தொலைபேசியில் ஆறுதல் கூறியோருக்கும் மற்றும் பல வழிகளில் உதவி புரிந்தோருக்கும் எமது உளப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டு, இன்று (19.02.2008) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நாலுவரவை, குருக்கள் பகுதி,
கரணவாய் கிழக்கு, கரவெட்டி. (சி/551504)

உங்கள் பிரிவால் வாடும்:
குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் செல்லையா யோகராசா



மலர்வு
02 ★ 02 ★ 1951

ஆண்டு ஒன்று ஆனாலும்
அழியாத தீபமாய் ஆனவரே!
அன்பிற்கு விளக்கேற்றிய - அப்பாவே
அனைவர் உள்ளத்திலும் கலந்தவரே!

யோகத்தின் திருவுருவே!
யோகராசா எம் திருக்கரமே!
தேசத்தின் திகழ் ஒளியே - உம்மை
தேடுகின்றோம் எம் அப்பாவே!

அந்நிய நாடாம் லிபியாவிலே ஆவி பிரிந்தாலும்
அன்பான மனைவி பத்மாவதியையும்
பிரான்ஸ் நாட்டில் வாழும் பகீர்த்தனா
சசிகுமாரையும்
பேரப்பிள்ளைகளையும் மறக்காத மனம் படைத்தவரே
- அப்பா

கொலண்டிலே குடியிருக்கும் மகனாம் தீபனையும்
இளைய மகளாம் தனுர்ஷனாவையும் - அப்பா
இன்னும் மறக்குமோ இனிய நினைவுகள்
தாங்காது தாங்காது தரணியே தாங்காது

பார்க்காத உள்ளங்கள் - அப்பா
பதைபதைத்து துடித்து நிற்க
விண்ணக விளக்காக
விண்மீனாய் திகழும் அப்பாவே!

உதிர்வு
02 ★ 03 ★ 2007



திதி:
19.02.2008
சதுர்த்தசி

அப்பாவே உங்களது ஆத்மா சாந்தியடைய
எங்கள் குலதெய்வம் காளித்தாயை
வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அச்சுவேலி வடக்கு,

(சி/551463)

தகவல்:
மனைவி, பிள்ளைகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# கொசோவோவின் உதயம்

முன்னாள் யூகோஸ்லாவியக் குடியரசான சேர்பியா விலிருந்து பிரிந்து ஒரு தனிநாடாக - ஒரு தலைப்பட்சமாக - சுதந்திரப் பிரகடனம் செய்திருக்கின்றது கொசோவோ.

அந்தப் பிரகடனம் வெளியான அடுத்த கணமே அதை அங்கீகரிக்க மறுக்கும் எதிர்ப்பு அறிக்கையை இலங்கை விழுந்தடித்து வெளி யிட்டு விட்டது.

கொசோவோ தனிநாடாவதை பல ஐரோப்பிய நாடுகள் வரவேற்கின்றன. கொசோவோவின் அத் தீர்மானத்துக்குப் பின்னணியில் நின்று, இத்திசையில் அதனை வழிநடத்தியவையே ஐரோப்பிய நாடுகள்தாம் என்பது வெள்ளிடைமலை.

அத்தகைய பின்புல ஆதரவைத் தந்த அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள்கூட கொசோவோவின் தனிநாட்டுப் பிரகடனத்தை அங்கீகரிக்கத் தயாராவதற்குள் இலங்கையின் எதிர்ப்பு அறிக்கை அவசர அவசரமாக வெளியாகிவிட்டது.

இந்த விவகாரத்தில் 'பேதி' குடித்த நிலையில் இலங்கை துடிப்பது அப்பட்டமாக வெளிப்படுகின்றது.

இலங்கை மட்டும் என்றல்ல. தேசிய இனங்களை அடக்கி, ஒடுக்கி, அவற்றின் சுயநிர்ணய உரிமையை மறுத்து மேலாதிக்கம் செய்கின்ற ஆட்சி முறைமைகளைக் கொண்டுள்ள எல்லா நாடுகளுமே -

பிரிவினைக்கு எதிராகத் தமது அதிகாரத்தின் அரூபக் கரங்களைக் கட்டவிழ்த்து விட்டிருக்கும் மேலாதிக்கப் போக்குத் தேசங்கள் அனைத்துமே -

கொசோவோவின் தனிநாட்டுப் பிரகடனத்தை முழு அளவில் எதிர்க்கின்றன என்பதே உண்மை.

கொசோவோவில் அல்பேனிய இன மக்களின் இன விடுதலையை உறுதிசெய்யும் தனிநாட்டுப் பிரகடன நியாயம், தத்தமது நாடுகளிலும் பொருத்திப் பார்க்கப்பட்டு, அங்கங்கெல்லாம் அம்முறைமை நடைமுறைப் படுத்தப்பட முயற்சி எடுக்கப்படுமானால் தமது நிலை அதோ கதிதான் என்பது அந்த நாடுகளுக்கும் அவற்றின் ஆட்சியாளர்களுக்கும் நன்கு தெரியும்; புரியும்.

அதனால்தான் அவை விழுந்தடித்துக்கொண்டு இந்தத் தனிநாட்டுப் பிரகடனத்தை முழு மூச்சில் எதிர்க்கின்றன.

ஆனால் ஐரோப்பிய நாடுகள் மற்றும் அமெரிக்காவின் முழு ஆதரவுடன் தனிநாட்டுப் பிரகடனம் செய்திருக்கும் கொசோவோவை, அதை இவ்வளவு காலமும் தனது ஆளுகைக்குள் அடக்கி வைத்திருந்த சேர்பியாவினாலோ அல்லது சேர்பியாவின் ஞானத்தந்தையான ரஷ்யாவினாலோ அடக்க முடியாது என்பதுதான் மெய்மை நிலை. அத்தேசத்தின் விடியல் வரலாற்றின் பிரிக்கமுடியாத தேவைப்பாடு; தவிர்க்க முடியாத நிகழ்வு.

கொசோவோவின் ஒருதலைப்பட்சமான தனிநாட்டுப் பிரகடனம் ''சர்வதேச உறவுகளில் நம்பமுடியாத முன்மாதிரியாகிவிடும்'' - என்று இலங்கை எச்சரிப்பதன் நோக்கமும் ஆழமும் கூடப் புரிந்துகொள்ளத் தக்கதே.

கொசோவோ ஆக 4 ஆயிரத்து 200 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பையும் 21 லட்சம் மக்கள் தொகையையும் கொண்ட பிரதேசம். அதுவே தனிநாடு ஆகக் கூடிய தகுதியை உடையது என்றால் சுமார் ஏழாயிரத்து ஐந்நூறு சதுர மைல் விஸ்தீரணத்தையும் சுமார் நாற்பது லட்சம் மக்கள் தொகையையும் கொண்ட ஈழத் தமிழர் தாயகம் அதே தனிநாட்டு அந்தஸ்தைக் கோருவதில் இருக்கக்கூடிய நியாயப்பாடுகள் கொழும்புக்குப் 'பேதி' அளிப்பனவாக அமைகின்றன.

அது மாத்திரமல்ல. தமது தேசத்தின் - இனத்தின் - விடுதலைக்கான சுதந்திரப் போராட்டத்தை ஆயுத வழிக்குத் திருப்பமுன்னரே - 1977 இலேயே - தமது சுயநிர்ணய உரிமையின் விருப்பத்தை - தனித் தமிழ் ஈழத்துக்கான இசைவாக, ஜனநாயகத் தேர்தல் வாக்களிப்புமூலம் தமிழர்கள் சர்வதேச சமூகத்துக்குத் தெளிவாக வெளிப்படுத்தியிருந்தனர்.

கடந்த பொதுத் தேர்தலில் கூட தமிழரின் அந்த விருப்பமும், எதிர்பார்ப்பும், ஆணையும் ஜனநாயக வாக்கெடுப்புமூலம் மீண்டும் வெட்ட வெளிச்சமாக்கப் பட்டதையும் சர்வதேசம் அறியும்.

தவிரவும், தனியான தாயகம், தனியான மொழி, தனியான பண்பாடு, தனித்துவமான தேசமாகவும், தேசியமாகவும் நீண்டகாலம் நிலைகொண்டிருந்த வரலாற்றுச் சரிதம் என தனிநாட்டுக்குரிய அனைத்துப் பண்பியல்புகளையும் - உரிமைகளையும் - கொண்டு அமைந்துள்ள தமிழர் தேசத்தை அடக்கி, ஒடுக்கி, நியாயமற்ற முறையில் தனது ஆளுகைக்குள்ளும் மேலாதிக்கத்துக்குள்ளும் நசுக்கி வைத்திருக்கும் இலங்கைக்கு, பிறிதொரு பூமியில் இதே பண்பியல்புகளுடன் அடக்கப்பட்டிருந்த ஒரு மக்கள் கூட்டம் தனித் தேசமாக எழுச்சியுற்று உருக்கொண்டு எழுவதைச் சகிக்க முடியாது என்பது புரிந்து கொள்ளத்தக்கதே. அந்த முன்னுதாரணம் தனக்கும் பொருந்தும் என்பதால் பதறப்படுகின்றது இலங்கை.

அடக்குமுறை விலங்கு நீடித்து நிலைக்காது. என்றோ ஒருநாள் அது உடைந்து விழுவது நிச்சயம் என்பதையே கொசோவோ என்ற தனிநாட்டின் பிறப்பு எமக்கு உணர்த்துகின்றது.

'தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும் - எனினும் தர்மம் ஒருநாள் வெல்லும்' என்ற தத்துவத்தின் நிகழ்வே கொசோவோவின் உதயம். அது இங்கும் கூடப் பொருந்தும் என்பதும் கவனிக்கத்தக்கது.

# விடுதலைப் புலிகளின் நடமாட்டம் தமிழகத்தில் இல்லவே இல்லை

## மத்திய உள்துறை இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

இராமேஸ்வரம், பெப்.19

தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு சிறப்பான முறையில் திருப்திகரமாக உள்ளது. விடுதலைப் புலிகளின் நடமாட்டங்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன என்று மத்திய உள்துறை அமைச்சர் ஸ்ரீபிரகாஷ் ஜெய்ஸ்வால் கூறியுள்ளார்.

தமிழகக் காங்கிரஸார் சிலர் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் தமிழகத்தில் அதிகமாக உள்ளதாகத் தெரிவித்துள்ளார்களே என்று இராமநாதபுரத்தில் செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் கூறி யவை வருமாறு:-

தமிழகத்தின் அரசியல் நடப்புப் பற்றி எனக்குத் தெரியாது.தமிழ் நாட்டில் சட்டம் - ஒழுங்கு மிகவும் திருப்திகரமாக உள்ளது. கடந்த அ.தி. மு.க. ஆட்சியுடன் ஒப்பிடும்போது தற்போது தமிழ் நாட்டில் நல்லாட்சி நடந்துவருகிறது.

தமிழகத்தில் பெரியஅளவில் விடுதலைப்புலிகளாலோ, தீவிரவாதிகளாலோ எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. அதற்கு விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகளே காரணம். விடுதலைப் புலிகள் நடமாட்டம் உள்ளதாக மத்திய உள்துறைக்கு இதுவரை எந்தத் தகவலும் வரவில்லை. இருப்பினும் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் 49 பேரைத் தமிழக அரசு கைது செய்துள்ளது. விடுதலைப் புலிகளை ஆதரிப்பவர்கள் மீதும் முதலமைச்சர் கடும் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா விடுதலைப் புலிகளின் பெயரைப் பயன்படுத்தி தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு கெட்டுவிட்டதாக பழி சுமத்திவருகிறார். தமிழகத்தில் யார் பயங்கரவாத செயலில் ஈடுபட்டாலும் மத்திய, மாநில அரசுகள் இரும்புக் கரம் கொண்டு ஒடுக்கும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

இராமேஸ்வரம் வரும் இலங்கை அகதிகள் விவகாரத்தில் தமிழக அரசு தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. தமிழகத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் சிறப்பாக உள்ளன. இருப்பினும் முதலமைச்சர் கோரினால் மேலதிகமாகப் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ய மத்திய அரசு தயாராக உள்ளது - என்று அவர் கூறினார். (சி)

# பாகிஸ்தானிலிருந்து ஆயுதங்கள் பெறுவதை இலங்கைத் தூதுவர் ஒப்புக்கொள்கின்றார்

புதுடில்லி, பெப். 19

விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டு முறியடிப்பதற்காக இலங்கை பாகிஸ்தானிடமிருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதாக இந்தியாவிற்கான இலங்கைத் தூதுவர் சி.ஆர். ஜெயசிங்க புதுடில்லியில் ஒப்புக்கொண்டுள்ளார்.

ஜனநாயக ரீதியாகத் தெரிவுசெய்யப்பட்ட - சட்ட ரீதியான - அரசுக்கு எதிராகப் பயங்கரவாதப் பிரச்சினையை நாம் எதிர்கொண்டுள்ளோம் எனத் தெரிவித்துள்ள அவர், இவ்வாறான சூழ்நிலையில் பயங்கரவாதத்தை எதிர்க்க அரசு ஆயுதக் கொள்வனவில் ஈடுபடவேண்டியுள்ளது, அதனை நாங்கள் செய்கிறோம் என்றும் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கடந்த சில மாதங்களில் வன்முறைகள் தீவிரமடைந்துள்ளதைச் சுட்டிக்காட்டியுள்ள அவர், ஆயுதக் கொள்வனவு இலங்கையின் உள்நாட்டுப் பாதுகாப்பிற்காகவே மேற்கொள்ளப்படுகின்றது, வெளிச்சக்திகளின் அச்சுறுத்தல் காரணமாகவல்ல என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவிடமிருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய இலங்கை விரும்புகின்றதா என்ற செய்தியாளர்களின் கேள்விக்கு நேரடியாகப் பதிலளிக்காத அவர், இலங்கை எப்போதும் இந்தியாவின் ஆதரவை எதிர்பார்க்கின்றது, இந்தியாவுடன் நல்லெண்ணம் பேணப்படுகின்றமை குறித்து எவ்வித சந்தேகமுமில்லை என்று தெரிவித்தார்.

பிளவுபடாத இலங்கையைப் பாதுகாக்கும் - அனைவரும் ஏற்றுக்கொள்ளும் - அரசியல் தீர்வை முன்வைப்பதற்கு இலங்கை எடுக்கின்ற முயற்சிகளுக்கு இந்தியாவின் ஆதரவுள்ளது என்பது குறித்து இலங்கை மக்களின் மனதில் எவ்வித சந்தேகமுமில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (சி)

## தமிழக மேம்பாட்டுக்கு உதவக் கூடிய

# சேது சமுர்த்திரத் திட்டத்தை மத்திய அரசு தேர்தல் பயம் காரணமாகக் கைவிடுமா...?

தூத்துக்குடி,பெப்.19

தமிழர்களின் 150 ஆண்டு காலக் கனவான சேது சமுத்திரத் திட்டத்தை மத்திய அரசு விரைந்து நிறைவேற்றுமா? அல்லது 'தேர்தல் பயம்' காரணமாக கிடப்பில் போடுமா என்ற சந்தேகம் தற்போது தென் மாவட்ட மக்களிடையே எழுந்துள்ளது. - இப்படித் தமிழக நாளேடு ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

தூத்துக்குடியிலிருந்து சென்னை உள்ளிட்ட பிற துறைமுகங்களுக்குச் செல்லும் கப்பல்கள் இலங்கையைச் சுற்றாமல் நமது கடல் எல்லையிலேயே செல்லவும், நமது கடற்படைக் கப்பல்கள் இலங்கையைச் சுற்றாமல் தவிர்க்கவுமே சேது சமுத்திரக் கால்வாய் அமைக்க முடிவு செய்யப்பட்டது.

அதற்காக ஆதாம்பாலம், பாக்கு நீரிணை, வங்காளவிரிகுடா, பாக். ஜலசந்தி ஆகிய பகுதிகளில் 157கி.மீ. நீளமும், 300 மீற்றர் அகலமும், 12 மீற்றர் ஆழமும் கொண்ட கால்வாய் அமைக்க முடிவு செய்யப்பட்டு பல கட்ட ஆய்வுகளுக்கு பின் ரூபா. 2 ஆயிரத்து 427 கோடியிலான அத்திட்டத்திற்கு கடந்த 2005 ஜூலை 2இல் பிரதமர் மன்மோகன் சிங் மதுரையில் அடிக்கல் நாட்டினார். பணிகள் விரைந்து முடிக்கப்பட்டு 2008 நவம்பரில் கால்வாயில் முதல் கப்பல் ஓடும் என்று அறிவிக்கப்பட்டது.

### இராமர் பாலத்தை இடிப்பதற்கு எதிர்ப்பு வந்தது

ஆதாம்பாலப் பகுதியில் கால்வாய் தோண்டும் பணி தொடங்க இருந்த போது, அது இராமர் பாலம்; அதை இடிக்காமல் மாற்று வழியில் கால்வாய் தோண்ட வேண்டுமென பா.ஜ., அ.தி. மு.க., உள்ளிட்ட கட்சிகள், இந்து அமைப்புகள் குரல் எழுப்பின.

அப்பாலத்தை இடிக்க உயர்நீதிமன்றம் தடை விதித்தது. அதையடுத்து கடந்தாண்டு செப்ரெம்பரோடு சேது கால்வாய் தோண்டும் பணியும் முடங்கியது.

சமீபத்தில் குஜராத் உள்ளிட்ட மாநிலங்களில் நடந்த சட்டசபைத் தேர்தல்களில் காங்கிரஸ் தோல்வியடைந்தது. அதற்கு 'இராமர்' பாலப் பிரச்சி னையும் ஒரு காரணம் எனச் சுதாரித்துக் கொண்ட மத்திய காங் கிரஸ் அரசு, சேது கால்வாயில் ஆரம்பத்தில் காட்டிய வேகத்தைக் குறைத்துக் கொண்டது. 'இராமர்' பாலம் தொடர்பாக காங்கிரஸிற்குள்ளேயே ஆதரவு, எதிர்ப்பு கருத்துகள் நிலவுகின்றன. சேது கால்வாய் தொடர்பாக இன்னும் பல ஆய்வுகள் செய்யவேண்டியுள்ளதாகக் காங்கிரஸ் தலைவர்கள் சமீபத்தில் தெரிவித்தனர்.




### 3 ஆண்டுகள் முடிந்த நிலையில் மீண்டும் ஆய்வு செய்ய முடிவு

திட்டம் தொடங்கி மூன்று ஆண்டுகள் முடிந்த நிலையில் மீண்டும் அத்திட்டம் குறித்து ஆய்வு செய்ய வேண்டுமென காங்கிரஸ் சொல்வது திட்டத்தைத் தள்ளிப்போடத்தான் என்ற கருத்து நிலவுகிறது.

கர்நாடகா உள்ளிட்ட 10 மாநிலங்களில் இந்த ஆண்டு சட்டசபைத் தேர்தலும், அடுத்த ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலும் நடக்கவுள்ளன. இச்சூழ்நிலையில் 'இராமர்' பாலத்தை இடித்தால் தேர்தல்களில் தோல்வியைச் சந்திக்க நேரிடும் எனக் கருதும் காங்கிரஸ், திட்டத்தை துரிதப்படுத்தாமல் வைத்துள்ளது என்றும் அரசியல் நோக்கர்கள் தெரிவிக்கின்றனர்.

ஒரு புறம் மத்திய காங்கிரஸ் அரசு அமைதியாக இருந்தாலும், மறுபுறம் அக் கூட்டணியிலுள்ள தி.மு.க., கம்யூனிஸ்ட் கட்சிகள் திட்டத்தை விரைவுபடுத்த வலியுறுத்துகின்றன. தற்போது கால்வாய் தோண்ட ஆறாவது பாதை தேர்வு செய்யப்பட்டுள்ளது.

### திட்டத்தைச் செயற்படுத்த ஆறாவது பாதை தெரிவு

[illegible] ஐந்து பாதைகளில் கால்வாய் தோண்டினால் பவளப் பாறைகள் அழிக்கப்படும். சுற்றுச்சூழல் பாதிப்படை யும். மீனவர்களின் தொழில் பாதிக்கப்படுமென அறிஞர்கள் தெரிவிக்கின்றனர். எனவே, மாற்றுப் பாதையில் திட்டத் தைச் செயல்படுத்த சாத்தியமல்ல. தற்போது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பாதையில் மட்டுமே திட்டத்தைச் செயற்படுத்த முடியுமெனத் தெரிகிறது.

சேது கால்வாய்த் திட்டம் மத்திய அரசின் தேர்தல் 'பயம் காரணமாக' விரைவுபடுத்தப்படாமல் உள்ளதால் அது எப்போது முடியும் எனத் தெரியவில்லை. ஏற்கனவே அறிவிக்கப்பட்டதைவிட தற்போது இத் திட்டத்திற்கு இரண்டு மடங்கு அதிகமாகச் செலவாகுமெனக் கூறப்படுகிறது.

தென் மாவட்டங்களின் வளர்ச்சி, இளைஞர்களின் வேலைவாய்ப்பைக் கருத்திற்கொண்டு திட்டத்தை விரைந்து செயல்படுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும். அதற்காக உயர்நீதிமன்றத்தின் தடையை எதிர்த்து மேல்முறையீடு செய்யவேண்டுமென பொதுமக்கள் எதிர்பார்த்துள்ளனர். சேதுத்திட்டம் நிறைவேறுவதும், கைவிடப்படுவதும் மத்திய அரசின் கையில் தான் உள்ளது. - இவ்வாறு தமிழக நாளேடு விவரித்துள்ளது. (அ-சி)

## நாளை

மாசி - 08 20.02.2008
புதன்கிழமை
திதி : சதுர்த்தசி
முற்பகல் 10.11 வரை
நட்சத்திரம் : ஆயிலியம்
முன்னிரவு 07.17 வரை
பூரணை விரதம்
சுபநேரம் : 05.02 - 06.32
இராகுகாலம் : 12.32 - 02.02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராண்டு நீங்காத நினைவலைகள்

## போதகர் M.M. இன்பருபன் (இன்பண்ணா)



தோற்றம்
29.07.1952

மறைவு
19.02.2006

இன்பமாய் இப் பூமியினில்
இன்பருபனாய் அவதரித்தீர்
இயன்றவரை இயேசுவின் பணி செய்தீர்
இனிமையான இன்புறுவலுடன் யாவருடனும் பேசினீர்
இயேசுவின் வழிதனை
இன்பமாய் போதித்தீர்
''உங்களின் பெயரை கின்னஸ் புத்தகத்தில்'
பதியாமல் எங்கள் பெயரையும் சேர்த்து
உங்களுடன் ஜீவ புத்தகத்தில் பதித்தீரே''
இன்பண்ணா நாங்கள் ஓயவில்லை
இறுதியில் உங்களைக் காண்போம்

வாழ்க இயேசுவின் நாமம்!
வளர்க இயேசுவின் பணி!

சீயோன் குடும்பம்.

**வாழ்வாதார உதவித்திட்டம்**

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கணவனை இழந்த மற்றும் ஆதரவற்ற பெண்களுக்கான வாழ்வாதார உதவித்திட்டங்கள் நாளை புதன்கிழமை வழங்கப்படும் என செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (203-111)

# கண்ணீர் அஞ்சலி



மானிப்பாய் பரிஸ் லயன்ஸ் கழக செயலாளர் திரு இ.கஜருபன் அவர்களின் பாசமிகு மாமனும் முன்னாள் லியோ கழக உறுப்பினர் திருமதி வி.தர்சினியின் பாசமிகு தந்தையாருமாகிய

## ம.மகேந்திரன்

15.02.2008 அன்று கொழும்பில் காலமான செய்தி அறிந்து ஆறாத் துயரடைந்தோம். அவர் சமூகத்திற்கு ஆற்றிய சேவைகளை நினைவு கூர்ந்து அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கழக உறுப்பினர்கள்.
மானிப்பாய் பரிஸ், மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகங்கள்.

(சி/557511)

# கண்ணீர் அஞ்சலி



நெசவாளர் கூட்டுறவுச் சங்க முன்னாள் செயலாளரும் நெசவு ஆசிரியருமாகிய

## சுப்பையா நவரத்தினம் (சாமி)

அவர்கள் 12.02.2008 அன்று கனடாவில் காலமான செய்தி அறிந்து ஆறாத்துயரில் மூழ்கியிருக்கின்றோம். ஆற்றமுடியாத அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திருமதி மகேஸ்வரி குருசாமி (இளைப்பாறிய ஆசிரியை)
குடும்பத்தினர் (மீசாலை).

(71223)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
18 . 12 . 1948

மறைவு
30 . 01 . 2007

## சுந்தரலிங்கம் சிவநாயகி

(திதி: பூர்வபக்க திரயோதசி-19.02.2008)

ஈராறு மாதங்கள் கடந்தது என்று
சொல்ல மனசு மறுக்கிறது
யோசிக்க யோசிக்க நிமிடம் கடந்தாலும்-உம்
சிரித்த முகத்தோற்றம் எம் நெஞ்சத்தைக் கடக்காது

71/27, புங்கன்குளம் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

## இராமநாதன் நுண்கலைக் கழகம்

நுண்கலைமாணி (சங்கீதம்/நடனம்/கலையும் வடிவமைப்பும்)
கற்கைநெறிகளுக்கான பல்கலைக்கழக அனுமதி - 2007/2008

## நுண்ணறிவுப் பரீட்சைக்கான விண்ணப்பம்

1. நுண்கலைமாணி (சங்கீதம்/நடனம்/கலையும் வடிவமைப்பும்) பட்டப் படிப்பிற்கான கற்கை நெறிகளுக்கு அனுமதி பெற விரும்பும் கீழ்வரும் தகுதியுடையவர்களிடமிருந்து 10.03.2008ஆம் திகதி வரை நுண்ணறிவுப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
2. கற்கைநெறிக்காலம்: நான்கு வருடங்கள்.
3. அனுமதிக்கான ஆகக்குறைந்த தகுதியும் தகைமைகளும்
2007ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாத க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நிபந்தனைகளுக்கு ஏற்ப பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறத் தகுதி பெற்றுள்ளதோடு,
   - (அ) நுண்கலைமாணி - சங்கீதம் கற்கைநெறி விண்ணப்பதாரிகள் கர்நாடக சங்கீதத்தில் திறமைச்சித்தி (C)க்கு குறையாத தரமும்
   - (ஆ) நுண்கலைமாணி - நடனம் (பரதநாட்டியம்) கற்கைநெறி விண்ணப்பதாரிகள் பரதநாட்டியத்தில் திறமைச் சித்தி (C)இற்கு குறையாத தரமும்
   - (இ) நுண்கலைமாணி - கலையும் வடிவமைப்பும் கற்கைநெறி விண்ணப்பதாரிகள் சித்திரக்கலையில் திறமைச்சித்தி (C)இற்கு குறையாத தரமும்

   பெற்றிருப்பதோடு ஏனைய ஏதாவது இரு பாடங்களில் சாதாரண சித்தி(S)இற்கு குறையாத தரமும் பெற்ற மாணவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவர்.
4. அறிவுறுத்தல்கள்
   - மேற்படி கற்கைநெறிகளில் சங்கீதம், நடனம் ஆகிய கற்கைநெறிகளுக்கான தெரிவு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தால் நடத்தப்படும் ஆற்றுகைப் பரீட்சை, நேர்முகப்பரீட்சை ஆகியன உள்ளடங்கிய நுண்ணறிவுத் தகுதிகாண் பரீட்சை மூலம் நடைபெறும்.
   - கலையும் வடிவமைப்பும் கற்கைநெறிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழத்தால் நடத்தப்படும் எழுத்துப் பரீட்சை, செயல்முறை பரீட்சை, நேர்முகப் பரீட்சை ஆகியவை உள்ளடங்கிய நுண்ணறிவுத் தகுதிகாண் பரீட்சை மூலம் தெரிவு நடைபெறும்.
   - 2007ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் பெற்ற Z புள்ளி மற்றும் சங்கீதம்/நடனம்/சித்திரக்கலை ஆகியவற்றில் பெற்ற தரம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக் கழக மூதவை ஆற்றுகைப் பரீட்சை, நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படவேண்டியவர்கள் பற்றி எடுக்கும் தீர்மானத்திற்கு அமையவே விண்ணப்பதாரிகள் இத்தகுதிகாண் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.
   - விண்ணப்பதாரிகள் அனைவரும் பாடசாலை அதிபரால் அல்லது சமாதான நீதவானால் உறுதிப்படுத்தப் பட்ட க.பொ.த. உயர்தரப் பரீட்சை பத்திரத்தின் (Z பெறுபேறு, பொதுச்சாதாரண பரீட்சையின் புள்ளிகள், பல்கலைக்கழக அனுமதி பெறும் தகுதி ஆகியன உள்ளடக்கிய) பிரதியொன்றை விண்ணப்பத்துடன் தவறாது இணைத்தல் வேண்டும்.
   - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மேற்குறிப்பிடப்பட்ட கற்கைநெறிகளில் ஏதாவதொன்றுக்குத் தெரிவு செய்யப்பட்டு, பதிவினை மேற்கொண்ட மாணவரொருவர் இனிவரும் ஆண்டுகளிலான க.பொ.த. உயர்தரப் பெறுபேற்றின் அடிப்படையில் (அதாவது 2007ஆம் ஆண்டின் பின்னர்) பல்கலைக்கழக அனுமதிகளுக்காக எக்காரணம் கொண்டும் விண்ணப்பிக்க முடியாது என்பதை கவனத்தில் கொள்ளவும்.
5. விண்ணப்பப் படிவம் பெறும் முறை:
விண்ணப்பப் படிவங்களை நேரில் பெற விரும்புவோர் யாழ்.பல்கலைக்கழகச் சிறாப்பர் கருமபீடத்திலோ அல்லது மக்கள் வங்கி யாழ்.பல்கலைக்கழகக் கிளையிலோ ரூபா 150/= செலுத்திய பற்றுச்சீட்டை பரீட்சைகளும் அனுமதிகளும் கிளையில் சமர்ப்பிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.
தபால்மூலம் பெற விரும்புவோர் நிதியாளர், யாழ்.பல்கலைக்கழகம் என்னும் பெயருக்கு ரூபா 150/= பெறுமதியான காசுக்கட்டளையுடன் முத்திரை ஒட்டப்பட்ட சுயவிலாசம் இடப்பட்ட 23x10 செ.மீ. அளவுள்ள கடித உறையை உதவிப்பதிவியாளர் பரீட்சைகளும் அனுமதிகளும் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்புவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம் தவிர்ந்த வெளிமாவட்ட விண்ணப்பதாரிகள் தபாற் போக்குவரத்து தாமதத்தை தவிர்க்க மாதிரி விண்ணப்பப் படிவத்தை www.jfn.ac.lk என்ற எமது இணையத்தளத்திலிருந்து பிரதி செய்து பெற்று நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம் என்னும் பெயருக்கு ரூபா 150/=பெறுமதியான காசுக்கட்டளையுடன் அனுப்பலாம்.
விண்ணப்பங்கள் அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் விண்ணப்பிக்கும் கற்கை நெறியைக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது நேரில் 10.03.2008ஆம் திகதிக்கு முன் கையளித்தல்வேண்டும்.
6. விண்ணப்பங்களை அனுப்ப/ஒப்படைக்க வேண்டிய முகவரி:

| | | |
|---|---|---|
| *உதவிப்பதிவாளர்,<br>பரீட்சைகளும் அனுமதிகளும் கிளை,<br>யாழ்.பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்* | அல்லது | *சிரேஷ்ட உதவிப் பதிவாளர்,<br>பரீட்சைகளும் மாணவர் சேவைகளும் கிளை,<br>வவுனியா வளாகம்,<br>யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், வவுனியா.* |

7. மேற்குறித்த கல்வித்தகைமைகளுக்கு அமையாத, பூரணப்படுத்தப்படாத, மேற்குறிப்பிட்ட ஆவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட போட்டோப்பிரதிகள் இணைக்கப்படாத, தெளிவில்லாத விண்ணப்ப முடிவுத் திகதிக்குள் கிடைக்கப்பெறாத விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும். மேலதிக விவரங்களுக்கு 021 222 6714 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்புகொள்ளவும்.

பதிவாளர்.

18.02.2008.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



திருமதி
மனோகரன்
மகாலட்சுமி (சோதி)

தோற்றம்
21 * 12 * 1959

மறைவு
20 * 01 * 2008

கடந்த 20.01.2008 அன்று காலமான எங்கள் குடும்ப விளக்கின் இறுதிக் கிரிகைகளில் கலந்து கொண்டவர்கள் மற்றும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்கள் அனைவருக்கும் நன்றிகள். இன்று (19.02.2008) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

865, நாவலர் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். [சி/551513]

குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில்
23 . 06 . 1949



ஆண்டவன் அடியில்
20 . 01 . 2008

அமரர்

## அந்தோனி பர்ணாந்து செபமாலைமுத்து

(யாழ்.பல்கலைக்கழகப் பாதுகாப்பு உத்தியோகத்தர்)

புதுமலராய் பூத்த மண்ணில்
புன்னகைத்த எங்கள் பப்பாவே!
பல யுகங்கள் போல் இருக்குதப்பா!
நீங்கள் இருந்த இடம் எல்லாம் தவிக்குதப்பா!
உங்கள் முகம் காணாது தவிக்கின்றோம்
எங்கள் பப்பா ஆலமரமாய் இருந்து விட்டு
அவசரமாய் சென்றதென்ன
மரணம் உங்களை மட்டுமே எடுத்துச் சென்றது ஏன்?
உங்கள் ஞாபகங்களை மறக்க முடியாது பப்பா
இப் புவியில் நாம் இருக்கும் வரை
இதயத்தில் ஏற்றி உம்மை நாங்கள்
இறைஞ்சிடுவோம் பப்பா

20.01.2008 இல் இறைபதம் அடைந்த எமது குடும்பவிளக்கின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இன்று (19.02.2008) செவ்வாய்க்கிழமை காலை 6 மணிக்கு கொய்யாத்தோட்டம் புனித கிறிஸ்து அரசர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். இதில் அனைவரும் கலந்து கொண்டு அவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்றாடும்படி கேட்டுக்கொள்கிறோம்.

27/23, ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம்.
T.P:0779127468

இவரின் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, மகன்,
மகள்மார், மருமகன்.

(71123)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொசோவோவின் சுதந்திரத்தை அங்கீகரிப்பது தொடர்பில் ஐ. நா., ஐரோப்பிய ஒன்றியத்துக்குள் கருத்து வேறுபாடு

பிரிஸ்டினா, பெப்.19

சேர்பியாவிலிருந்து பிரிந்து தன்னை தனிநாடாக ஒருதலைப்பட்சமாக கொசோவோ பிரகடனப்படுத்தியுள்ள அதேவேளை, அதன் சுதந்திரத்தை அங்கீகரிப்பது குறித்து ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றுக்கிடையில் கருத்து வேறுபாடு காணப்படுகின்றது எனத் தகவல் வெளியாகியுள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற பாதுகாப்புச் சபையின் அவசர கூட்டத் தொடரில் ரஷ்யா கொசோவோவின் சுதந்திரத்தைத் தடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டது. கொசோவோவில் உள்ள சேர்பியர்களின் நிலை குறித்து அது ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ளது. பாதுகாப்புச் சபையின் 15 உறுப்பு நாடுகளிடையே இடம்பெற்ற விவாதம் கொசோவோ குறித்து காணப்படும் கருத்து வேறுபாட்டை புலப்படுத்தியுள்ளது.

ரஷ்யா அதன் நேச நாடான சேர்பியாவிற்கு ஆதரவு வழங்கியுள்ளது. அதேவேளை, அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் உட்பட ஏனைய ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் அல்பேனியர்களைபெரும்பான்மையாகக்கொண்ட கொசோவோவிற்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

சேர்பியாவும், ரஷ்யாவும் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் பாதுகாப்புச் சபையின் அவசர கூட்டம் இடம்பெற்றது. கொசோவோவை ஐக்கிய நாடுகளே நிர்வாகம் செய்ய வேண்டும் என்று 1999ஆம் ஆண்டு பாதுகாப்புச் சபை தீர்மானத்தை மீறும் வகையில் சுதந்திரப் பிரகடனம் அமைந்துள்ளதாக இவை குற்றம் சாட்டியுள்ளன.

கொசோவோவின் பிரகடனத்திற்கு சட்ட ரீதியான வலுவில்லையென சேர்பிய ஜனாதிபதி தெரிவித்தாரென ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான்-கீ-மூன் கூறினார். அதேவேளை, சுதந்திர கொசோவோவில் எதிரிற்கு எதிராகவும் பாகுபாடுகாட்டப்படாது என கொசோவோ பிரதமர் உறுதியளித்துள்ளார் எனவும் மூன் தெரிவித்துள்ளார்.

கொசோவோவிலும் அதன் பிராந்தியத்திலும் வன்முறையைத் தூண்ட குறிப்பிட்ட கருத்துகளைத் தவிர்க்குமாறு அவர் சகல தரப்பையும் கேட்டுக்கொண்டுள்ளார்.

பாதுகாப்புச் சபையின் கொசோவோ தொடர்பான தீர்மானம் தொடர்ந்தும் நடைமுறையிலிருக்கும் என்றும் பான்-கீ-மூன் உறுதியளித்துள்ளார்.

இதேவேளை, பாதுகாப்புச் சபையின் கூட்டத் தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர் ஐக்கிய நாடுகளுக்கான ரஷ்யத் தூதுவர் விட்டலி சர்கின் கொசோவோவின் பிரகடனம் குறித்து ரஷ்யா ஆழ்ந்த கவலை கொண்டுள்ளதாகத் தெரிவித்தார்.

பாதுகாப்புச் சபையின் முன்னைய தீர்மானத்தின்படி ஐ.நா. தொடர்ந்தும் கொசோவோவை நிர்வகிக்கின்றது எனத் தெரிவித்துள்ள ரஷ்யத்தூதுவர், கொசோவோவின் சுதந்திரப் பிரகடனத்தைக் கருத்தில் கொள்வதற்கான சட்ட ரீதியான அடிப்படை எதுவுமில்லையென்றும் தெரிவித்துள்ளார்.

கொசோவோவில் உள்ள சேர்பியர்கள் உட்பட ஏனைய சிறுபான்மை சமூகங்களின் பாதுகாப்புக் குறித்து ரஷ்யா கவலை வெளியிட்டுள்ளது.

கொசோவோவில் உள்ள சேர்பியர்கள் சுதந்திரப் பிரகடனத்தை எதிர்த்தால் அவர்களுக்கு எதிராக ஒடுக்கு முறையைப் பயன்படுத்தக் கூடாது என்றும் ரஷ்யா கோரியுள்ளது.

எனினும், கொசோவோவிலுள்ள சேர்பியர்களுக்கு எவ்வித ஆபத்துமில்லை எனத் தெரிவித்துள்ள அமெரிக்காவும், ஏனைய மேற்குலக நாடுகளும் பாதுகாப்புச் சபையின் 1999ஆம் ஆண்டு தீர்மானம் கொசோவோவின் சுதந்திரத்தைத் தடுக்கவில்லையென்றும் தெரிவித்துள்ளன.

இதேவேளை, நேற்றுத் திங்கட்கிழமை பிரசல்ஸில் நடைபெறவிருந்த ஐரோப்பிய ஒன்றிய வெளிவிவகார அமைச்சர்களின் கூட்டத்தின் பின்னர் பல ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் சுதந்திர கொசோவோவை அங்கீகரிக்கவுள்ளன. எனினும், சில நாடுகள் இது ஆபத்தான முன்னுதாரணமாக அமைந்துவிடும் என்று அச்சம் தெரிவித்துள்ளன. சைபிரஸ், ருமேனியா, ஸ்பெய்ன் கிரேக்கம் போன்ற நாடுகள் இவ்வாறான அச்சத்தை வெளியிட்டுள்ளன.

# பாகிஸ்தானில் அமைதியான வாக்குப்பதிவு

இஸ்லாமாபாத், பெப்.19

பெரும் பதற்றத்தின் மத்தியில் பாகிஸ்தானில், நாடாளுமன்றம் மற்றும் நான்கு மாகாணங்களுக்கான வாக்குப்பதிவு குறைவான அசம்பாவிதங்களுடன் நேற்று நடந்தது. தேர்தல் முடிவுகள் இன்றிலிருந்து வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பாகிஸ்தானில், கடந்த 8 ஆம் திகதியே தேர்தல் நடந்திருக்க வேண்டும். ஆனால், முன்னாள் பிரதமர் பெனாஸிரின் படுகொலையால், 18 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. ஜனாதிபதி முஷாரப் மற்றும் ஆளும் பாகிஸ்தான் லீக்(கியூ) கட்சிக்கு எதிராக, பாகிஸ்தான் மக்கள் கட்சியும், பாகிஸ்தான் மக்கள் கட்சியும்,பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்) கட்சியும் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டன.

கடந்த சனிக்கிழமை பிரசாரம் முடிவடையும் நேரத்தில் தற்கொலைப் படைத் தாக்குதல் நடத்தப்பட்டதில் 40பேர் கொல்லப்பட்டனர். இதையடுத்து, பிரபலமான தொலைக்காட்சி சனல்களில் எதிர்க்கட்சிகள் விளம்பரங்களை வெளியிட்டு பிரசாரத்தில் ஈடுபட்டன. தேர்தலுக்காக நாடு முழுவதும் 64 ஆயிரம் வாக்குச் சாவடிகள் நிறுவப்பட்டிருந்தன.

இதனையடுத்து பலத்த பாதுகாப்பிற்கிடையில் நேற்றுக் காலை பாகிஸ்தான் நேரப்படி 8 மணியளவில் வாக்குப் பதிவு தொடங்கியது. ஆனால், காலை வாக்குப் பதிவு மந்தமாகவிருந்தது என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. போகப்போக வாக்குப்பதிவு வீச்சுப் பெற்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. வாக்குப் பதிவு மாலை 5 மணிவரை நடைபெற்றது. அதன் பின்னர் வாக்குப் பெட்டிகள் தேர்தல் ஆணையகத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டன. வாக்கு எண்ணும் பணி நேற்றிரவு ஆரம்பிக்கப்படவிருந்தது. இன்று காலையிலிருந்து உத்தியோகபூர்வ முடிவுகள் வெளியாகும் எனக் கூறப்படுகின்றது.

இதேவேளை, பலத்த பாதுகாப்பையும் மீறி பஞ்சாப் மாகாணத்தில் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சியின் வேட்பாளர் ஒருவர் நேற்றுக்காலை சுட்டுக் கொல்லப்பட்டார்.

தேர்தலையொட்டி நடந்த சண்டையில் 5 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர். மேலும் வடகிழக்கு மாகாணத்தில் இரண்டு முறை குண்டுவெடிப்புகள் நிகழ்ந்தன. ஆனால் இதில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை.

# யாழ்.மாவட்டத் தமிழ்த்தினப் போட்டிகளில் மாகாணமட்டத்துக்கு தெரிவானோர் விவரம்

யாழ்ப்பாணம், பெப்.19

கடந்த ஆண்டுக்குரிய தமிழ்மொழித் தின மாவட்ட மட்டப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விவரங்களை மாவட்ட மட்ட தமிழ்மொழித் தினக்குழு அறிவித்துள்ளது.

இப் போட்டிகளில் முதலிடம் பெற்ற மாணவர்கள் மாகாண மட்டப் போட்டிகளில் கலந்து கொள்ள முடியும். மாகாண மட்டப் போட்டிகள் யாவும் இந்த மாத இறுதிக்குள் வவுனியாவில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாகாணமட்டப் போட்டிகளில் கலந்து கொள்ள உள்ள மாணவர்களை, வவுனியாவுக்குச் செல்வதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டு தயார் நிலையில் இருக்குமாறு வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

போட்டியில் முதல் இடத்தைப் பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு;

வாசிப்பு: பிரிவு 1 - ம. துஷிதா (கரவெட்டி மாணிக்கவாசகர் வி.), பிரிவு 2 - உ.குணசுகி (கொடிகாமம்திருநாவுக்கரசு வி.),

ஆக்கத்திறன் வெளிப்பாடு: பிரிவு 1- பா.வினோஜன் (கரவெட்டி மாணிக்கவாசகர் வி.)

ஆக்கம் எழுத்து: பிரிவு 1 - கு.கௌசிகா (கொடிகாமம் திருநாவுக்கரசு வி.)

கட்டுரை: பிரிவு 2 - த.கோகுலன் (ஹாட்லி), பிரிவு 3 - ஸ்ரீ.கேதிகா (தும்பளைசிவப்பிரகாசவி)

கட்டுரை இலக்கியநயம்: பிரிவு 4 - தெ.பிரணவன் (ஹாட்லி), பிரிவு 5 - சி.ரம்ஜா (உசன் ம.வி.)

இலக்கணம்: பிரிவு 4 - சு.தாரணி (வேம்படி), பிரிவு 5 - ஜஸ்மின்கிறிஸ்ரெலா (அருணோதயா)

திறனாய்வு: பிரிவு 5 - செ.விபூசனி (இந்து மகளிர்)

குறுநாடகம்: பிரிவு 4 - அ.கோகுலன் (வரணிம.வி.), பிரிவு 5 - வி.இமாஜினி (ஸ்கந்தவரோதயா)

கவிதை: பிரிவு 4 - ஸ்ரீ.றஜிபவீன் (ஹாட்லி), பிரிவு 5 - ந.மதனிகா (பண்ணாகம் மெய்கண்டான்.ம.வி)

சிறுகதை: பிரிவு 4 - [illegible] திகா (ராமநாதன் கல்லூரி), பிரிவு 5 - பு.சிந்துஷா (கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் ம.வி.)

பேச்சு: பிரிவு 1 - பா.சௌமியா (வதிரி திரு.இருதயக் கல்லூரி), பிரிவு 2 - இ.சஞ்சீவ் (கொடிகாமம் திருநாவுக்கரசு வி.), பிரிவு 3 - ஆ.உமாகரன் (யாழ்.இந்து), பிரிவு 4 - பு.திருமாறன் (மகாஜனா), பிரிவு 5 - ச.கோபிநாத் (யாழ்.மத்தி)

பாவோதல்: பிரிவு 1 - வெ.நிசோதன் (ஜோண் பொஸ்கோ), பிரிவு 2 - ஜே.மதுஷிகன் (கொக்குவில் இந்து), பிரிவு 3 - செ.அருள்ராஜ் (புனித அந்தோனியார்), பிரிவு 4 - ம.துளசி (யாழ்ப்பாணக் கல்லூரி), பிரிவு 5 - ஸ்ரீ.காயத்திரி (வேம்படி)

இசையும் அசைவும்: பிரிவு 1 - ந.ரம்மியா (ஞானாசாரியார் கல்லூரி)

இசை: பிரிவு 2 - ர.நிஷா (இராமநாதன்), பிரிவு 3 - ப.பானுப்பிரியன் (சென். ஜோண்ஸ்), பிரிவு 4 - சு.தசாங்கன் (யூனியன்), பிரிவு 5 - செ.சந்திரிகா (யாழ்.இந்து மகளிர்)

இசை - குழு: பிரிவு 1 - ஹாட்லி, பிரிவு 2 - சாவகச்சேரி இந்து.

நடனம் - தனி: பிரிவு 1 ந.அபிராமி (மகாஜனா), பிரிவு 2 - க.கௌதமன் (யாழ். மத்தி), பிரிவு 3 - யோ. மயூரதி (சாவச்சேரி இந்து), பிரிவு 4 - கி.பிரவீனா (யாழ்.இந்து மகளிர்), பிரிவு 5 - பா.தர்ஷனா (வேம்படி)

நடனம் - குழு: பிரிவு 1 - யாழ்.மத்தி

நாட்டியநாடகம்: பிரிவு 2 - ராமநாதன் கல்லூரி

நாடகம்: தி.போ - உடுவில் மகளிர்

வில்லுப்பாட்டு: தி.போ - யூனியன் கல்லூரி

விவாதம்: தி.போ - விக்னேஸ்வராக் கல்லூரி

தமிழறிவு வினாவிடை: தி.போ - மகாஜனா

முஸ்லீம் நிகழ்ச்சி: தி.போ - ஒஸ்மானியாக் கல்லூரி

நாட்டுக்கூத்து: தென்மோடி - திருக்குடும்ப கன்னியர் மடம் ம.வி

வடமோடி: கைதடி நாவற்குழி அ.த.க.பா

விஷேடகூத்து: விக்ரோறியாக் கல்லூரி

சிந்துநடை: சண்டிலிப்பாய் இந்து

இசைநாடகம்: மகாஜனாக் கல்லூரி


## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தின் முன்னாள் தலைவரும்
முன்னாள் பணியாளருமான உ.சிவஞானம்,
தற்போது பணிபுரியும்
உ.செல்வஞானம்
ஆகியோரின் தந்தையுமான
கந்தையா உருத்திராபதி

அவர்கள் 18.02.2008 அன்று காலமாகியதை அறிந்து ஆறாத்துயரில் மூழ்கி இருக்கின்றோம். அவரின் பிரிவால் துயர் உற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிள்றோம்.

தெல்லிப்பழை பனை, தென்னை வள அ.கூ.சங்கம்.
அங்கத்தவர்கள்/ பணிப்பாளர்கள்/ பணியாளர்கள்.



## மரண அறிவித்தல்

### அன்னப்பா இராசப்பா

(ஓய்வு பெற்ற உத்தியோகஸ்தர், தபால் திணைக்களம் )

மானிப்பாய் தெற்கு, இந்துக்கல்லூரி ஒழுங்கையை பிறப்பிடமாகவும், உரும்பிராய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட அன்னப்பா இராசப்பா அவர்கள் 18.02.08 அன்று இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அன்னப்பா, இராசம்மா தம்பதியினரின் மகனும், காலஞ்சென்றவர்களான நெல்லியப்பா, செல்லப்பா ஆகியோரின் சகோதரனும், வாமதேவன், நாகரத்தினம், பத்மாவதி, கேதுலிங்கம் ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரனும், அல்லிமலரின் அன்புக் கணவரும் மகேஸ்வரன், திலகவதி, விக்னேஸ்வரன் (கனடா),ஜெயவதி(கனடா),நகுலேஸ்வரன்(இ.போ.ச,கோண்டாவில்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இந்திராதேவி, மோகனராசா, கண்ணண்,சுபாசினி, அகிலா ஆகியோரின் மாமனாரும்சிந்துரி, ரமீதன், ஹரிசா, வளவன், மாறன், நேருஜன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறியத்தரப்படும்.

இந்துக்கல்லூரி ஒழுங்கை,
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.


## சாயி நிலைய போயா நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,பெப்.18

யாழ். மத்திய சாயி நிலையத்தில் நாளை போயாதின ஆன்மீக நிகழ்வுகள் நடைபெறும். காலை 5.30 மணிக்கு நகர சங்கீர்த்தனத்துடன் ஆரம்பமாகும் நிகழ்வுகளில் சொல் செல்வர் ஆறு.திரு முருகன் மு.ப 10.30 மணிக்கு ஆன்மீக உரை நிகழ்த்துவார். நண்பகள் 12 மணிக்கு நாராயண சேவை இடம் பெறும்.

## பூரணை நிகழ்வு

தாவடி ராம கிருஷ்ண சந்நிதியில் நாளை காலை 9 மணிக்கு பூரணை விழா நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

சிறப்பு ஆன்மீக உரை, அஷ்டோத்திர நாமார்ச்சனை, [illegible] என்பன இடம்பெறும். (1)


## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்
25 ★ 09 ★ 1925



மறைவு
02 ★ 05 ★ 2007

திருமதி சரஸ்வதி வயிரமுத்து

திதி:- சதுர்த்தசி (19.02.2008)

எம் மீது அன்பும், பாசமும் புகட்டி அறிவூட்டி குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து எங்களுக்கு நல்வழி காட்டிய அன்புத் தெய்வமே, ஆண்டொன்று சென்றாலும் உங்கள் நினைவுகள் எம்மை விட்டு என்றும் அகலாது. உங்கள் ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கிறோம்

அச்செழு,
நீர்வேலி.

(71246)

தங்கள் நினைவில் வாழும்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேலும் 3,300 கோடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுத்த முனைப்பில் தீவிரமாக இருக்கும் அரசு, அதற்கான செலவினத்தைச் சமாளிப்பதற்காக கிடைத்த இடமெல்லாம் கடன் வாங்கி வருகிறது.

வெளிநாட்டு வங்கிகளிடமிருந்து உயர்ந்த வட்டிக்கு, குறுகிய காலக் கடன்களைஅதுகண்ணை மூடிக்கொண்டு பெற்றுக் கொள்வதாகவும் -

இது பெரும் பொருளாதாரப் பின்னடைவு களையும் பெரும் மோசமான நெருக்கடிகளையும் ஏற்படுத்தும் எனவும் -

பொருளாதார நிபுணர்கள் குறை கூறி வருகின்றனர்.

கடந்த ஒக்டோபரில் சுமார் ஐயாயிரத்து ஐந்நூறு கோடி ரூபாவை (ஐம்பது கோடி அமெரிக்க டொலரை) ஐந்து வருடக் கடன் முறி அடிப்படையில், 8.25 வீத வட்டிக்கு வெளிநாட்டுத் தனியார் வங்கிகளிடம் அரசு வாங்கியிருந்தது.

இப்போது அதேபோல மேலும் சுமார் மூவாயிரத்து முந்நூறு கோடி ரூபாவை (முப்பது கோடி அமெரிக்க டொலர்களை) வெளிநாட்டு வங்கிகளிடமிருந்து கூட்டுக் கடனாகப் பெறுவதற்கான அறிவித்தலை அரசு வெளியிட்டிருக்கின்றது.

மார்ச் அல்லது ஏப்ரல் மாதத்திற்குள் இந்த நடவடிக்கையைப் பூர்த்தி செய்ய அரசு திட்டமிட்டுள்ளது.

கடன் பெறுவதற்கான நோக்கத்தைத் தெளிவு படுத்துவதற்காக வெளிநாட்டு வங்கிகளுடனான சந்திப்பொன்றிற்கு மத்திய வங்கி ஏற்பாடு செய்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட சந்திப்பின்போது இது குறித்த வங்கிகளின் கருத்தும் பெறப்படவுள்ளதாகக் கூறப்பட்டது.

பெப்ரவரி 21 திகதிக்குள் தமது யோசனைகளை முன்வைக்குமாறு இலங்கை அரசு முன்னர் தம்மைக் கேட்டிருந்ததாகவும் வெளிநாட்டு வங்கிகள் தெரிவித்துள்ளன.

கடந்த ஒக்ரோபரில் கடன் வழங்கிய வங்கிகளின் குழுக்களையே தற்போது கலந்தாலோசனைக்குத் தாங்கள் அழைத்திருக்கின்றார்கள் என்று மத்திய வங்கியின் பொதுக் கடன் பிரிவுத் தலைவர் ஸி.ஜே.பி. சிறிவர்த்தன தெரிவித்தார். (உ)

## குடாநாட்டு வான்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் குண்டுத் தாக்குதல் சத்தங்களால் சில நிமிட நேரங்கள்குடாநாடு அதிர்ந்தது. தாக்குதலில் ஏற்பட்ட சேதங்கள் குறித்த தகவல்கள் எவையும் நேற்றிரவு வரை வெளியாகவில்லை. (அ-2)

## தள்ளாடித் தளம்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டுக்கு மேற்பட்ட பீரங்கிகள் வீழ்ந்து வெடித்தன என்றும் தெரிவிக்கப்படுகிறது. காயமடைந்த படையினர் அநுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர்.

சம்பவத்தைத் தொடர்ந்து மன்னார் - மதவாச்சி பிரதான வீதியூடான போக்குவரத்து நேற்று நண்பகல் 12 மணிவரை தடைப்பட்டிருந்தது என்றும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன. (சி)

## மன்னாரில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுக்கரை, பாலைக்குழி, உயிலங்குளம் ஆகிய பகுதிகள் ஊடாக நேற்று அதிகாலை 5.30 மணி முதல் செறிவான ஆட்லெறி எறிகணை, பல்குழல் வெடிகணைச் சூட்டாதரவுகளுடனும், டாங்கி மற்றும் வான் தாக்குதல்கள் சகிதம் படையினர் பாரிய முன்நகர்வினை மேற்கொண்டனர்.

இம் மும்முனை நகர்வுக்கு எதிராக விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை நடத்தியுள்ளனர். நேற்று மாலை 6 மணியளவில் படையினரின் முன்நகர்வுத் தாக்குதல் விடுதலைப் புலிகளால் தடுத்து நிறுத்தப்பட்டது. இத் தாக்குதலில் 15 படையினர் கொல்லப்பட்டுள்ளனர். 30க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர் என்று விடுதலைப்புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (அ)

## அம்பாறையில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வயது மகனான சரோமி என்ற குழந்தை சம்பவத்தில் அதிர்ச்சியுற்று மயக்கமடைந்தது.

கொலையுண்ட கிறிஸ்தவ மதகுரு நேற்றுமுன்தினம் இரவு தனது வீட்டிருந்து மனைவி, பிள்ளையுடன் மோட்டார் சைக்கிளில் சென்றவேளை இவரைப் பின்தொடர்ந்து பிறிதொரு மோட்டார் சைக்கிளில் வந்த ஆயுததாரிகள் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று கூறப்படுகிறது.

கொலைசெய்யப்பட்ட மதகுரு நீல் எதிரிசிங்க (வயது 35) என்றும், படுகாயமடைந்த அவரது பாரியார் சிரோமி எதிரிசிங்க (வயது 32) என்றும் அடையாளங்காணப்பட்டிருக்கின்றனர்.

படுகாயமடைந்த சிரோமி எதிரிசிங்கவும் அதிர்ச்சியினால் மயக்கமடைந்த அவரது குழந்தையும் அம்பாறை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருக்கின்றார்கள். இந்தச் சம்பவம் தொடர்பில் நேற்றுக்காலை அம்பாறை நீதிவான் விசாரணைகளை மேற்கொண்டார்.

இந்தக் கொலைக்கு ரி-56 ரகத் துப்பாக்கி பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்றும், இது தொடர்பாக விசேட பொலிஸ்குழு ஒன்று விசாரணைகளை மேற்கொண்டுவருகிறது என்றும் அம்பாறை மாவட்ட பொலிஸ்நிலைய அதிகாரி அநுரா வீரக்கோன் தெரிவித்தார். (சி)

## மன்னார் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக்காலை 5.30 மணியளவில் படையினர் தாம் திடீரென நடத்திய தாக்குதல் நடவடிக்கை மூலம் புலிகளின் பலமான பாதுகாப்பு அரணுடன் கூடிய சுமார் அறுநூறு சதுர மீற்றர் பிரதேசத்தைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தனர் என்று அறிவித்துள்ளனர்.

படை நகர்வை எதிர்த்த பத்துப் புலிகள் உயிரிழந்தனர். மேலும் ஆகக் குறைந்தது பத்துப் படையினர் படுகாயமடைந்தனர். புலிகளின் இரு சடலங்களையும் ரி- 56 ரக ஆயுதங்கள் மூன்றையும் மீட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இம் மோதல்களில் ஒரு சிப்பாய் உயிரிழக்க, நான்கு சிப்பாய்கள் காயமடைந்தனர். படையினர் தமது நிலைகளை மேலும் பலப்படுத்தி வருகின்றனர் என்றும் அரசுத் தரப்பின் அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (சி)

## இந்தியக் கொமாண்டோக்களின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாடுகள் நடப்பதாகப் பேச்சடிபடுகின்றதே....?

பதில்:- அது நல்ல திட்டம்தானே....!

கேள்வி:- அது உண்மையா?

பதில்:- நாம் அதை ஊக்கப்படுத்த வேண்டும். இந்தத் தீர்வைத்தான் 'இடி அமின் தீர்வு' என நான் சர்வதேச ரீதியில் சில காலமாகக் குறிப்பிட்டு வருகிறேன். பின்னர் எப்போதும் மகிழ்ச்சியாக இருக்கக்கூடிய ஒரு நாட்டுக்குப் பெருமளவு பணத்தைக் கொடுத்து இத்தகையோரை அனுப்பி விட வேண்டும். உகண்டாவின் முன்னாள் சர்வாதிகாரியான இடி அமீனை இப்படித்தான் பெருந் தொகைப் பணத்தைக் கொடுத்து மனைவிகள், பிள்ளைகளுடன் சவூதி அரேபியாவுக்கு அனுப்பி வைத்தனர்.

கேள்வி:- இலங்கை எரித்திரியாவுடன் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்த வில்லை. எனவே, அவர்கள் பிரபாகரனுக்கு பாதுகாப்பான தஞ்சம் அளிப்பார்களா என்பதைக் கேட்டறிவது சாத்திய மற்றதாக உள்ளதே....?

பதில்:- இதற்காக நாம் எரித்திரியாவுக்கு ஒரு தூதுவரை நியமிக்க வேண்டும் என்பதல்ல, இராஜதந்திரத் தொடர்புகளை ஏற்படுத்த வேண்டும் என்பதே அர்த்தம். எரித்திரியாவில் வசிப்பது கிளிநொச்சியில் வசிப்பது போலக் கஷ்டமானது; கடினமானது.

**கிளிநொச்சியிலிருந்து வெளியேறினால் இந்தியா நிச்சயமாக அவரைப் பிடிக்கும்**

கேள்வி:- பிரபாகரன் இலங்கையிலிருந்து வேறு ஒரு நாட்டுக்குத் தப்பிச் சென்றால் இந்தியாவினால் அவர் கைது செய்யப்படும் ஆபத்து உள்ளது அல்லவா?

பதில்:- ஆம், அது அவரது பிரச்சினை. பிரபாகரன் கிளிநொச்சியிலிருந்து வெளியேறினால் இந்தியா நிச்சயம் அவரைப் பிடிக்கும்.

கேள்வி:- ஆனால், அவர் எங்காவது ஆரவாரமின்றி அமைதியாக இருப்பாரானால் அவருக்கு எந்தப் பிரச்சினையும் ஏற்படாதல்லவா? இந்தியாவுடன் ஓர் உடன்பாட்டை ஏற்படுத்தி, பின்னர் அவர் மீது இந்தியா கை வைக்காது என்பதை உறுதிப்படுத்தி, அத்தகைய ஏற்பாட்டுடன் அவரை நாட்டை விட்டு வெளியேற ஏன் தூண்டக்கூடாது?

பதில்:- அது மிகவும் கடினம். இந்திய நீதிமன்றங்களுக்கு அவர் தேவை. நீதித்துறை முதன்மை பெற்ற நாடு இந்தியா. அவர்கள் தங்களின் நீதிமன்றங்களைப் புறக்கணிக்க மாட்டார்கள். பிரபாகரனை நாடு கடத்துமாறு கோரும் குறிப்புகளை அவர்கள் எங்களுக்குத் தொடர்ந்து அனுப்பி வருகின்றார்கள். ராஜீவ்காந்தி படுகொலையில் குற்றவாளியாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பிரபாகரனை, இந்திய உச்ச நீதிமன்றத்தில் குற்றச்சாட்டை எதிர்கொள்வதற்காக இந்தியாவுக்கு நாடு கடத்தும்படி அவர்கள் எங்களுக்குத் தொடர்ந்து நினைவூட்டல்களை அனுப்பி வருகின்றமை வழமை.

**நாடு கடத்துமாறு இந்தியா எங்களை 3 மாதங்களுக்கு முன்னர் கேட்டது**

கேள்வி:- பிரபாகரனை நாடு கடத்துமாறு இந்தியா எப்போது உங்களை இறுதியாக கேட்டுக் கொண்டது?

பதில்:- மூன்று அல்லது நான்கு மாதங்களுக்கு முன்னர். அவரைப் பிடித்தால் ஜனாதிபதி தெரிவித்த மாதிரி அவரை இந்தியாவிடம் ஒப்படைப்போம். எனினும் எம்மால் அவரை இதுவரை கைது செய்ய முடியவில்லை.

கேள்வி:- அவர்களுக்கு (இந்தியாவுக்கு) பதிலளித்துள்ளீர்களா?

பதில்:- இல்லை. ஏனென்றால் அந்த மனிதர் எம்மிடம் இல்லையே....!

கேள்வி:- இந்திய இராணுவத்தினர் உதவியுடன் அவரைப் பிடிப்பதற்கு ஏதாவது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுகின்றதா?

பதில்:- இதற்கான முறைப்படியான வேண்டுகோள் எதுவும் விடுக்கப்படவில்லை. எனினும் அனைவரும் முயற்சிக்கின்றனர்.

இறைமையுள்ள நாடென்ற வகையில் எம்மால் அப்படிச் செய்ய முடியாது.

கேள்வி:- இந்தியாவிலிருந்து வரும் சுமார் ஆயிரம் முதல் இரண்டாயிரம் கொமாண்டோக்களின் உதவியைப் பெற்று, இணைந்து ஒரு தாக்குதலை நடத்தி, அவரைப் பிடிக்க முடியாதா?

பதில்:- அது மிகவும் கடினமானது. ஏனெனில் சிறப்பான பாதுகாப்புடன், நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட காவலுடன் அவர் இருக்கிறார் என்பது உங்களுக்குத் தெரியும். எனவே, இதிலும் விட அதிக பலம் தேவைப்படும். அதுதான் எனது மதிப்பீடு.

கேள்வி:- சிறப்புப் படையணியாலும் கூட இது முடியாது என்கிறீர்களா?

பதில்:- சாத்தியமற்றது என்றே நான் நினைக்கிறேன். (உ)

## கொசோவோவின்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய செய்தி நிறுவனம் ஒன்று, கொசோவோ நிலையை ஒட்டி இலங்கையைச் சம்பந்தப்படுத்தி வெளியிட்ட ஆய்வு ஒன்றில் இப்படித் தெரிவித்துள்ளது.

அமெரிக்கா தலைமையிலான மேற்குலகம் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு யுத்தம் மூலம் தீர்வு காணமுடியாதென வலியுறுத்தி வருவதுடன், விடுதலைப் புலிகளுடன் பேச்சுகளை மேற்கொள்ளுமாறும் வேண்டுகோள் விடுத்துவருகின்றது. (உ)

## யாழ். பல்கலைக்கழக......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கம் நூலக வசதிகளை செய்து கொடுக்கும் என்றும் மானிய ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்கா தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழகத்தின் சட்டத்துறைசார் விரிவுரைகள், இதுவரைகாலமும் கொழும்பில் இருந்து அழைத்துவரப்பட்டவிரிவுரையாளர்களாலேயே நடத்தப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)





ACCOUNTING
By:P.பகீரதன்
தொடர் பரீட்சை - 2
20.02.2008 (புதன்)
காலை 8 மணி
பரீட்சை நடைபெறும் இடங்கள்:-
★ விக்னா
★ நாவலர்

PAPER CLASS
இந்து நாகரிகம்
பிரிவு-II ஆரம்பம்
19.02.2008 இன்று 3.30 pm
By:S. ஜெயக்குமார்
இம் மாதக்கட்டணம் இல்லை
யூனிவேர்சல்

Photo Copy
Computer Typing
Laser Print
Binding
Photo Scanning
Stencil Ronio
Offset Print
சகல விதமான கணனி வேலைகளுக்கும்
UNIVERSAL Printer
622, Manipay Rd, Oddumadam, Jaffna.
0776063173.

கணக்கீட்டு நூல்கள் வெளிவந்துவிட்டன
★ புதிய கம்பனிக் கணக்கீடு
★ கணக்கீட்டு நியமமும் எண்ணக்கருவும்
★ பங்குடைமைக் கணக்கீடு
ஆசிரியர்: S.D.J. சுதர்சன்
கிடைக்கும் இடங்கள்
All Ceylon Distributors,
Lanka Book Depot,
K.K.S. Road, Jaffna.

SUBRA (14) சித்தன்கேணி
மாதிரிப் பரீட்சைப் பெறுபேறு - வர்த்தகப்பிரிவு
1st - K.விசுவராஜ் 3rd - S.கோபிகா
2nd - S.சலோஜன் 4th - N.கோபிகா
5th - A.நிஜந்தா
✱மாதந் தோறும் பௌர்ணமியில் பரீட்சை.
✱வெளிமாணவர்களும் கலந்து கொள்ளலாம்.
வர்த்தகம் - V.நந்திஸ்
பொருளியல் - S.S.சிறி
கணக்கீடு - A.குபேசன், S.சிலன்

## மரண அறிவித்தல்

### சிவசுப்பிரமணியம் சடாட்சரம்



காரைநகர், தங்கோடையைப் பிறப்பிடமாகவும் இல.17, மேபிள் றோட், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணியம் சடாட்சரம் (18.02.2008) திங்கட்கிழமை கொழும்பில் காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.17, மேபில் றோட், கொழும்பு - 14.

தகவல்: சரஸ்வதி (மனைவி)

A/L 2008 / Day
தமிழ்
PAPER CLASS
WED 4.30 - 6 PM Sat, Sun 3pm
S.SIVA
Eco - NB. சஜீகரன்
Log- N. சசிகலா
Chris- A. மல்லிகா
Geo- A. Rajah
Hindu- S. கார்த்திக்
Poly.Sc- T. சஜன்
Eng - G. Rangit
Dra- ஆசிரியர்
SHAMROCK
ஈச்சமோட்டை, யாழ்.

CHEMISTRY SEMINAR
"POLYMERS" SEMINAR
Wed 20.02.08. 9.00 am
By:- அன்பு
Sunshine - Chemistry Exam
21/2 Thurs 12.30 நடைபெறும்
NEW SCIENCE CENTRE

New Genuine Intel PC
With New 17" Monitor& UPS
Just Below 47500/-
1Gb Flash Free
UNIT
347, K.K.S Road, Jaffna
0214590720,0773134737

M.A, M.COM, MBA, M.SC (Maths)
காமராசர் பல்கலைக்கழகம் (மதுரை)
✱ பல்கலைக்கழகத்தினால் புதிய ஆண்டிற்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
✱ பதிவுகள் யாவும் எமத நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.
MAல்: வரலாறு, அரசியல், பொதுநிர்வாகம், பொருளியல், தமிழ், ஆங்கில இலக்கியம், சமூகவியல், தத்துவமும் சமயமும், Journalism & mass communication ஆகிய பாடங்களில் ஒன்றைத் தெரிவு செய்ய முடியும்.
✱ P.G. DIPLOMA 1வருடகற்கை நெறிகளுக்கும் பதிவினை மேற்கொள்ளமுடியும்.
✱ பதிவுகள் முடிவுத்திகதி 29.02.08
குறிப்பு: (1) மே மாத பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகளிடம் இருந்து பரீட்சை விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் பரீட்சார்த்திகள் உடனடியாக அலுவலகத்திற்கு சமூகம் தரவும்.
(2) பரீட்சைத் விண்ணப்ப முடிவுத்திகதி: 25.02.2008
யாழ்.இணைப்பாளர், காமராசர் பல்கலைக்கழகம்
தொ.பே 222 8148
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

புதிய பிரிவுகள் ஆரம்பம்
Diploma Courses... **80% Off
** Computerized Accounting
(Tally, Accpack, MYOB, QuickPro)
** MS Office **DTP **V.B., .net
** Hardware ** Internet
* Video Editing *AutoCAD *ICT *GIT
International Courses...
*MCP *MCSE *MCSA
*CCNA *CCNP *N+ *A+
பதிவுகள் 23-02-2008 முன் நேரில்
Degree Course * BIT Semester 1,3 & 5
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
MCS
Supported By UNDP/JRRP


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.02.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.